JAFFNA

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

28.10.2015 - மலர் 12, இதழ் 35



## முகில்களின் மத்தியில் ஒரு கிராமம்

## நம்மை நாமே காத்துக்கொள்வோம்...

சகல விதத்திலும் தீயவர்களிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் உரிமை எமக்கு உண்டு.



அவ்வாறே, ஏதேனும் நடந்தால் அதனை வெளிப்படுத்தும் துணிவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அதற்கு உதவப் பலர் ஆயத்தமாக உள்ளனர். அத்தோடு, நீங்கள் அவ்வாறு செய்தால் அது சமூகத்தை நல்வழிப்படுத்த ஒரு காரணமாகவும் அமையும்.

சிலவேளைகளில் நாம் பெரிதும் நம்பும் ஒருவர்மூலமும் பிரச்சினைகள் ஏற்படலாம். மிகவும் விழிப்பாக இருங்கள்.



நண்பர்களே, எம்மைச் சூழ உள்ள பலர் சிறியோராகிய எமது பாதுகாப்புக்கு பக்கபலமாக உள்ளனர் என்பதை மறக்க வேண்டாம். முக்கியமாக செய்ய வேண்டியது சம்பவத்தை மறைக்காமல் வெளியே சொல்வதேயாகும்.


( 21ஆம் பக்கத்தில்... )

விலை ரூபா 15/-

PUBLIC LIBRARY JAFFNA



## 'ரொபோக்கள்' பணியாற்றும் ஹோட்டல்



## முன்னாள் வீரர்களின் கிரிக்கெட் தொடர்...


அமெரிக்காவில்...





மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எழுதும்போது
தவறுகள் நேர்ந்தால் அவற்றை
அழிக்க நானே உதவுவேன்.
நான் யார்?
.......................




எனது பெயர் என்ன?
..............................
என்னால் நீங்கள் பெறும் பயன்கள்
2 தருக.
..............................



நான் செல்லும் பாதை
வழியே புகை கக்கிச் செல்வேன்.
என்னைத் தெரியுமா?...........
நான் பயணிக்கும் பாதையை
எவ்வாறு அழைப்பார்கள்?
.......................





நான் எந்த
வகையைச்
சேர்ந்தவன்?
(பழ வகை,
மரக்கறி வகை)
எனது பெயர்
என்ன?
..............



1. இந்த இடம் குறிப்பது;
   1. ஆற்றங்கரை
   2. விளையாட்டுத் திடல்
   3. கடற்கரை
2. படத்தில் காணப்படும் சிறுவர்கள் என்னென்ன விளையாட்டுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்?

   ..........................................


3. இந்த நாள் ஒரு பிரகாசமான நாள் என்பதை எதனை வைத்துக் கூறக்கூடியதாக இருக்கின்றது?

   ..........................................

4. இங்கு காணப்படும் போக்குவரத்து சாதனம் ஒன்று தருக.

   ..........................................




1. (அ) பகுதியிலுள்ள உயிரினங்களின் வாழிடங்களை (ஆ) பகுதியில் இனங்கண்டு அருகில் இலக்கமிடுக.
2. அணில்களின் பிரதான உணவுகள் இரண்டு தருக.

   ..........................................

3. நீரில் வாழக்கூடிய மேலும் இரு உயிரினங்களைக் குறிப்பிடுக.

   ..........................................

1. இங்குள்ள இலக்கங்களில் பெறுமதி கூடிய இலக்கம் யாது?


   ..........................................

2. இரட்டை இலக்கங்கள் எவை?

   ..........................................

3. இலக்கம் 3 ஐ விடப் பெறுமதி கூடிய ஏதேனும் ஐந்து ஒற்றை இலக்கங்களைத் தருக.

   ..........................................



-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# ரொபோக்கள் பணியாற்றும் ஹோட்டல்







ஜப்பானின் நாகசாகி நகரில் அண்மையில் ரொபோக்கள் மட்டுமே பணியாற்றும் ஹோட்டல் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலின் பெயர் 'ஹேன்-னா ஹோட்டல்' என்பதாகும். இங்கு பணியாற்றும் ரொபோ பணியாளர்கள் மனிதனைப் போன்று இயங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஹோட்டலில் வரவேற்பு பணி, துப்புரவு பணிகள், உணவு பரிமாறும் பணிகள் என்பனவற்றை ரொபோக்கள் மேற்கொள்ளும் அதேவேளை, அவை சரிவர இயங்குகின்றனவா?, விருந்தாளிகளுக்கு சரியான முறையில் சேவைகள் இடம்பெறுகின்றனவா போன்றவற்றை மேற்பார்வை செய்வதற்கு மனித பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஹோட்டல் வரவேற்பாளர்கள்

இந்த ஹோட்டலின் வரவேற்பாளர்களாக ராட்சத ரொபோ டைனோசர் ஒன்றும் சாதாரண ரொபோ ஒன்றும் பெண் ரொபோ ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளன.

## ரொபோக்களிடமிருந்து சேவையினைப் பெறல்

இந்த ஹோட்டலின் உரிமையாளர் ஹிடியோ சவாடா என்பவராவார். தனது ஹோட்டலில் பெரும்பாலான பணிகளில் ரொபோக்கள் அமர்த்தப்பட்டுள்ளதைப் பற்றி இவர் கருத்துத் தெரிவிக்கும்போது, "ஏதேனுமோர் அதிசயத்தினை செய்ய வேண்டும் என்பதற்காக இதனை மேற்கொள்ளவில்லை. நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உச்ச பயன்பாட்டை பெறுவதே எனது முயற்சியின் நோக்கம்" என்றார். மனித உழைப்பை பயன்படுத்தி ஹோட்டல் ஒன்றை நடத்தும்போது ஏற்படும் அதிக செலவினை மிச்சப்படுத்துவதற்கும் வினைத்திறன் மிகு சேவைகளை வழங்க வேண்டும் என்பதையும் இதன் மூலம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். அதன்படி, ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் மனித பணியாளர்களால் வழங்கப்படும் சேவையில் 90% ஆனவற்றை ரொபோக்களிடமிருந்து பெற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த ஹோட்டலில் ஓர் இரவு தங்குவதற்கு 45 அமெரிக்கன் டொலர் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

## தகவல் வழங்கும் முறை

இந்த ஹோட்டலுக்கு விருந்தினர் ஒருவர் வந்தால், வரவேற்புப் பகுதியில் இருக்கும் டைனோசரானது, அவரை வரவேற்று ஹோட்டல் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கு தேவையான பொத்தானை அழுத்தும்படி விருந்தாளியிடம் தெரிவிக்கும். அதனையடுத்து, குறித்த நபர் பொத்தானை அழுத்தி தனது தனிப்பட்ட விபரங்களை குறிப்பிடுவார். அந்த தகவல்கள் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும். பின்னர், குறித்த விருந்தாளி தனக்கு வழங்கப்பட்டுள்ள ஹோட்டல் அறையை நோக்கி வரும்பொழுது மற்றுமொரு ரொபோ அவரைச் சந்திக்கும். இந்த ரொபோவிடம் இருந்து நேரம், காலநிலை போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். பின்னர் இன்னுமொரு ரொபோ அங்கு வந்து என்னென்ன உணவுகள் வேண்டும் என்றும், எப்பொழுது வேண்டுமென்றும் கேட்டு உரிய நேரத்தில் உரிய உணவு கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

இந்த ரொபோக்களால் ஆற்ற முடியாத இரு பணிகள் உள்ளன. அதாவது, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாததும் படுக்கை அறையை ஒழுங்குபடுத்த முடியாததுமே அந்த இரு பணிகளும் ஆகும். எனினும், இவ்விரு செயற்பாடுகளைச் செய்யும் பொருட்டு எதிர்காலத்தில் ரொபோக்களை தயார்படுத்த ஹோட்டல் உரிமையாளர் ஏற்பாடுகளை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் விபரம்

**2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை புகைப்படங்களுடன் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புகிறீர்களா?**

* சித்தியடைந்த மாணவரின் புகைப்படம், பெற்ற புள்ளிகள், பாடசாலை, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஒரு தாளில் தெளிவாக எழுதி, பெற்றோர் கையொப்பம், பாடசாலை அதிபரின் கையொப்பம் மற்றும் அத்தாட்சி முத்திரையையும் பதித்து, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சிப் பிரதியுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.



* குழுப்படம் அனுப்புபவர்களாயின், மீண்டும் தனிப்படம் அனுப்புவதை தவிர்க்கவும்.
* ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி: 2015 நொவெம்பர் 30.

அனுப்ப வேண்டிய முகவரி:

புலமைப்பரிசில்
சித்தியடைந்தோர் 2015
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அள்ளித் தரும் மனது



“அம்மா... பசி, இரண்டு நாளாக எதுவுமே சாப்பிட வில்லை. ஏதாவது கொடுங்கள்...”

வீட்டு வாசலில் பிச்சைக்காரப் பெண்மணியின் குரல். கோமளா ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அந்தப் பெண்மணி யின் இடுப்பில் வாடிய தளிராக ஒரு குழந்தை. அவளுக்கே உண்ண உணவில்லாத போது அந்தக் குழந் தைக்கு அவளால் எப்ப டிப் பாலூட்ட முடியும்? அவளுக்காகவும் அந்தக் குழந்தைக்காகவும் வருந்தியது கோமளா வின் உள்ளம்.

குரல் கொடுத்த அவளைப் பார்த்து, “சற்று இரு’ என்று கையைக் காட்டினாள். பின்னர் சமையல்கட்டை நோக்கி ஓடினாள். அங்கே அவளுடைய தாய் மைதிலி சமையல் வேலைகளில் மும்முர மாக இருந்தாள்.

“அம்மா... வெளியே ஒரு பிச்சைக்கார அம்மா நிக்கிறா... பார்க்கவே பரிதாபமாக இருக்கு. கொஞ்சம் சோறு தாருங்கள்... கொடுத்துவிட்டு வருகிறேன்...” அவள் குரலில் இரக்கம் மிகுந்திருந்தது.

“குழம்பு, கறியெல்லாம் இன்னும் தயார் ஆகவில்லை. சோற்றில் மோர் ஊற்றித் தருகிறேன். அதோடு, கொஞ்சம் ஊறுகாயும் எடுத்துச் சென்று அந்த அம்மாவிடம் கொடுத்து விடு. பாவம்... பசிக்காகத்தானே இந்தப் பாடெல்லாம்... ஒரு வழியும் தெரியாததால்தானே பிச்சை எடுக்கிறாங்க...”

அம்மா மைதிலியின் குரலில் அன்பு வெளிப்பட்டது. தாய் கொடுத்த உணவை வாங்கிக் கொண்ட கோமளாவுக்கு அந்தக் குழந்தையின் நினைவு வந்தது. குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து நான்கைந்து பிஸ்கட்டு களை எடுத்துக் கொண்டாள் கோமளா. அவற்றை அந்தப் பெண்மணியிடம் கொண்டு போய் கொடுத்துவிட்டுத் திரும்பும்போது பாட்டி மரகதத் தின் குரல் கேட்டது.

“கோமளா... இந்த வேளைப் பசிக்கு சாப்பாடு கொடுத்துட்டே... அடுத்த வேளைக்கு? அவளைக் கொஞ்சம் இருக் கச் சொல். நான் ஒரு கைப்பிடி அரிசி எடுத்துட்டு வர்றேன்...” பிச்சை என்று வருபவர்களுக்கு ஒரு கைப்பிடி அரிசி போட்டு அனுப்புவது மரகதத்தின் வழக்கம். பானையிலிருந்து கை நிறைய அரிசியை எடுத்துக் கொண்டு வந்தாள் அவள்.

“பாட்டி... பாட்டி... என்னிடம் தாருங்கள். நான் என் கையால் போடுகிறேன்...” கோமளா ஆர்வத்தோடு முன்வந்தாள்.

“கோமளா... நீ சோறு கொடுத்தாய்... பிஸ்கட் கொடுத்தாய்... அரிசியை பாட்டி போடுகிறேனே...” என்று மரகத மும் குழந்தையைப் போன்று ஆர்வத்தோடு கூறினாள். “பாட்டி... நான்தான் போடுவேன். நான் பள்ளிக்கூடம் போன பின்னர் யாராவது வந்தால் அவர்களுக்கு நீங்கள் அரிசி போடுங்கள்...” என்றாள்.

கோமளா விடாப்பிடியாக மறித்துக்கொண்டு நின்றாள். “கோமளா... நாந்தான் போட வேண்டும். உன்னுடைய அம்மா மைதிலியிடம் கேட்டுப் பார். அவளைக்கூட நான் போட விடமாட்டேன். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது...”

“அப்படி என்ன காரணம் பாட்டி?” என்று கேட்டாள் கோமளா.

“என் கைகளைப் பார். உன் கைகளையும், உன் அம்மாவின் கைகளையும் விட என் கை பெரிது. உங்கள் கைகளில் நீங்கள் அள்ளும் அரிசியை விட என் கையில் அதிகமாக அள்ளலாம். அதனால் தான் நான் போடுகிறேன் என்று கூறினேன்” என்றாள் மரகதம். பாட்டி யின் உயர்ந்த உள்ளத்தை உணர்ந்து கோமளா மிகவும் மகிழ்ந்தாள். ஆனால், அவள் அதோடு நிற்க வில்லை.

“பாட்டி.. நீங்கள் உங்கள் பெரிய கையால் போடும் அரிசியோடு நான் என் சின்னக் கையாலும் ஒரு பிடி போடுகிறேனே!” என்றாள்.அதைக் கேட்ட மரகதத்தின் மனம் நெகிழ்ந்துவிட்டது.

# இல்லாததை நினைத்து...



ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அவை அனைத்தும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. ஒரு மயில் மட்டும் எப்போதும் மற்றப் பறவைகள் மற்றும் விலங்குகளைப் பார்த்து பொறாமைப்பட்டுக் கொண்டே இருந்தது. உதாரணத்திற்கு யானை யைப் பார்த்து அது பெரியதாக இருக்கிறது என்றும், மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப் படும்.

இப்படியிருக்க ஒரு மழைக்காலத் தில் அந்த மயில் அழகாக ஆடத்து வங்கியது. ஆடியவாறே அது பாடவும் ஆரம்பித்ததால் மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத் துவங்கியது. அப்போது அங்கு வந்த மைனா மயிலை சமாதானப் படுத்தி அதன் அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம் “நீ மிகவும் அழகாக இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோஷப் பட்டிருக்கிறாயா?” என்று கேட்டது. அதற்கு மயில், சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு “இல்லை” என்று பதில் கூறியது.

இதனைக் கேட்டுச் சிரித்த மைனா “உலகில் பிறந்த ஒவ்வொருவருக் கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையும் இருக்கும். அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமே அன்றி எது நம்மிடம் எது இல்லையோ அதை நினைத்து வருத்தப் படவோ, பொறாமைப் படவோ, கூடாது” என அறிவுரை கூறியது. தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி தெரிவித்தது.

# ரூபா நோட்டு...



ஒரு கிராமத்தில் ஒரு பள்ளி இருந்தது. அந்த பள்ளியில் குமார் எனும் சிறுவன் படித்து வந்தான். ஒருநாள் குமார் சோகமாக இருப்ப தைக் கண்ட ஆசிரியர் அவனிடம் காரணம் கேட்டார். அதற்கு பதிலளித்த குமார் தான் ஒரு தவறு செய்துவிட்டதாகவும், அந்த தவறை காரணமாகக் காட்டி அவனின் நண்பர்கள் அவனை வெறுத்து ஒதுக்குவதாகவும் கூறினான்.

செய்த தவறை உணர்ந்த குமார் தன் நண்பர்களை எண்ணி ஏங்கு வதை அறிந்துகொண்ட ஆசிரியர் குமாருக்கு உதவி செய்ய நினைத் தார். அடுத்த நாள் வகுப்பிற்குச் சென்ற ஆசிரியர், ஒரு 50 ரூபாய் நோட்டை கையில் வைத்து இது யாருக்கு வேண்டும் என்று மாண வர்களிடம் கேட்டார். துள்ளி எழுந்த மாணவர்கள் அனைவரும் கைகளை உயர்த்தினர்.

மாணவர்களின் செய்கையைப் பார்த்த ஆசிரியர், அந்த நோட்டை கைகளால் கசக்கி இப்போது அந்த ரூபாய் நோட்டு யாருக்கு வேண்டும் என கேட்டார். அப்போதும் மாணவர்கள் கைகளை தூக்கியவாறே நின்றுகொண்டிருந்த னர். இம்முறை ரூபாய் நோட்டினை தூக்கி எறிந்த ஆசிரியர் மாணவர் களிடம் அதே கேள்வியைக் கேட்டார். மாணவர்களிடம் எந்த ஒரு மாற்றமும் இல்லை. வகுப்பிலி ருந்த அனைவருக்கும் அந்த 50 ரூபாய் வேண்டும் என்பதுபோல் கையை இறக்காமல் நின்றனர்.

கையில் மீண்டும் ரூபாய் நோட்டை எடுத்த ஆசிரியர், “இந்த 50 ரூபாய் நோட்டு அழுக்காக இருந் தாலும், கசங்கி இருந்தாலும் அதன் மதிப்புக் குறைவதில்லை. அதேபோல் சில நேரங்களில் நாம் தெரியாமல் செய்யும் தவறுகள் நம் மதிப்பைக் குறைத்துவிடாது. ஒரு மனிதன் தவறு செய்வது இயல்பு. அவன் தான் செய்த தவறை உணர்ந்துவிட்டாலே அவன் மன்னிக்கப்பட வேண்டும்.

அந்தவகையில், இந்த வகுப்பில் படிக்கும் குமார் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக, ஒரு தவறை செய்துவிட் டான். அந்த தவறு ரூபாய் நோட்டின் மேல் பட்டிருக்கும் அழுக்கைப் போன்றது. அதனால், குமாரின் மதிப்பு எப்போதும் குறையாது. எனவே, தெரியாமல் செய்த தவறுக்காக குமாரை ஒதுக்காமல் அவனுடன் சேர்ந்து பழகுங்கள்” என ஆசிரியர் கூறினார். ஆசிரியர் கூறிய கதையில் இருந்த உண்மையை உணர்ந்த சகல மாணவர்களும் குமாரி டம் மன்னிப்புக் கேட்டு அவனை தங்களுடன் சேர்த்துக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் வட்டமும் காடுகளின் அழிவும்

தாவர உணவு உற்பத்திச் செயல்பாட்டின்மூலம் (ஒளித்தொகுப்பு) வளிமண்டலத்திற்கு ஒட்சிசன் ($O_2$) வெளியேற்றப்படுகின்றது. புவியில் வாழும் மனிதன் உள்ளிட்ட உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்கு (சுவாசத்திற்கு) ஒட்சிசன் பிரதானமாகும்.

மனிதன் உள்ளிட்ட உயிரினங்களால் வெளிச்சுவாசத்தின்போது வெளியேற்றப்படும் காபனீரொட்சைட் வாயு ($CO_2$) மற்றும் மண் வழியாக பெறப்படும் நீர் ($H_2O$) என்பனவற்றை தாவரங்கள் தமது உணவு உற்பத்தி செயற்பாட்டிற்காகப் பயன்படுத்திக்கொள்கின்றன. இவ்விதமாகவே, ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட் உற்பத்தி மற்றும் பயன்பாடு என்பன சுழற்சி முறையில் நடைபெறுகின்றன.

அந்தவகையில், உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான ஒட்சிசனைப் பெற்றுக்கொள்வதற்காக தாவரங்களும் காடுகளும் பேருதவி புரிகின்றன. எவ்வாறாயினும், இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்து இன்றைய நாள் வரை இலங்கையில் பெருமளவில் காடழிப்பு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

*1948 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அன்று 54% ஆக இருந்த காடுகள், 1990 இல் 36.4% ஆகவும், 2011 இல் 29.7% வரையும் குறைவடைந்துள்ளதாக உலக வங்கி தெரிவிக்கின்றது. இன்று இந்நிலை மேலும் மோசடைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.*







உலக எரிசக்தி தேவையில் 41 சதவீதம் நிலக்கரியிலிருந்தே பெறப்படுகின்றது. கறுப்பு நிறத்திலான நிலக்கரியானது, புதைபடிம எரிபொருளாகும். நிலக்கரி என்பதை ஆங்கிலத்தில் Coal என்று குறிப்பிடுவர். 'புதைபடிமமாக மாறிய காபன்' என்பதே இதன் அர்த்தமாகும். புதைபடிம எரிபொருள் பிரிவில் நிலக்கரி, பெற்றோலிய எண்ணெய் மற்றும் இயற்கை வாயு என்பன உள்ளடங்குகின்றன.

நிலக்கரி உருவாவதற்கு முன்னர், உக்கிப்போன தாவரப் பகுதிகளிலிருந்து கரி (peat) உருவாகின்றது. இதனையடுத்தே நிலக்கரி உருவாகின்றது. நிலத்தினை அகழ்ந்தே நிலக்கரி பெறப்படுகின்றது. தற்போது மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார உற்பத்திக்கென நிலக்கரி பயன்படுத்தப்படுகின்றது.



## எரிசக்தியாகப் பயன்படும் சூழல் மாசுபடுத்தி

இலங்கையின் நுரைச்சோலை அனல் மின் நிலையம் நிலக்கரியினைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் 300 மெகாவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நிலக்கரி தகனமடைவதனால் உலகம் முழுவதும் சுற்றாடல் மாசடைவு பிரச்சினை எதிர்கொள்ளப்படுகின்றது. ஏனெனில், நிலக்கரி தகனமடையும்போது, வளிமண்டலத்தில் பெருமளவில் காபனீரொட்சைட் சேர்கின்றது. அத்துடன், சல்பர் டயொக்சைட், நைட்ரஜன் டயொக்சைட், காபன் மொனொக்சைட் ஆகியவையும் வளிமண்டலத்துடன் சேர்கின்றன. ஆகவே, நிலக்கரி உலகின் பிரதான எரிசக்தி மூலகமாக இருந்தாலும், அது மோசமான சூழல் மாசுபடுத்தியாகும்.

## Squirrel Catechu




தாவரவியல் பெயர்: *Areca concinna*

Arecaceae தாவர குடும்பத்திற்குரிய Squirrel Catechu எனும் பாக்குமரம் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஒரு தாவர இனமாகும். வனாந்தரங்கள் அழிக்கப்படுவதனால் இந்த தாவர இனமும் அழிந்துவிடும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ளது. இதனால், செந்தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஈரவலய காடுகளில் நீர்நிலைகளுக்கு அருகாமையில் வளரும் இந்த தாவர இனத்தை இப்பகுதியைச் சார்ந்த வீட்டுத் தோட்டங்களிலும் காண முடியும். இதில் வாசனை மிக்க மலர்கள் பூக்கும். இதன் காய்கள் செந்நிறமானவை. சிங்கள மொழியில் இதனை லேன் தெரி, லேன் புவக் என்றும் அழைப்பதுண்டு. இலங்கைக்கு உரித்தான தாவரமாக இருந்தாலும், பல்வேறு நாடுகளில் அலங்கார வளர்ப்பு தாவரமாகவும் வளர்க்கப்படுகின்றது.





| சோலார் பெனல் வெல்பவர் | போட்டி இல - 10 இன் வெற்றியாளர் | க.உதர்ஷன், 5/10, விகாரை வீதி, திருகோணமலை. |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்க மத்திய ஒரு கிர






உலகிலிருந்து தனிமைப்பட்ட கிராமங்கள், பகுதிகள், பழமையான இடிபாடுகள் என்பனவற்றுடன் பாரம்பரியம் மிக்க மனிதர்களையும் இன்றும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இவை யாவும் பண்டைய கால வரலாறுகளை வெளிப்படுத்தும் மௌன சாட்சிகளாகும். பண்டைய கால மனிதர்களின் சமூகம் சார்ந்த முக்கியமான விடயங்களை நாம் இந்த தனிமைப்பட்ட உலகிலிருந்து காண முடியும். அத்தகைய ஓர் இடம்தான் கடல் மட்டத்திலிருந்து 7,190 அடி உயரத்தில் அமைந்துள்ள உஷ்குலி எனும் கிராமமாகும். இது ஐரோப்பாவின் ஜோர்ஜியா நாட்டில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 200 பேர் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர்.

'உஷ்குலி' கிராமம் 'ஸ்வானெற்' என்ற பிரதேசத்தில் அமைந்துள்ளது. பசுமையான மலைகளின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கிராமம் எப்பொழுதும் முகில்களினால் மூடப்பட்டிருக்கின்றது. இங்கு வாழ்வது என்பது 'முகில்கள் மத்தியில் வாழ்தல்' என்றே கூறப்படும். வருடத்தின் ஆறு மாதங்கள் பனியினால் இப்பகுதி மூடப்பட்டிருக்கும்.

## உலக மரபுரிமை

'ஸ்வானெட்' பிரதேசம் உலக மரபுரிமைப் பிரதேசமாக 1996 ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டது. இந்தப் பகுதி பொதுமக்களுக்கான பார்வையிடல் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இங்குள்ள ஓரிரண்டு கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு வசிக்கும் மக்களும் பௌதீக நில அமைப்பும் பாதுகாப்புக்குரியன என்றும்கூட அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த கிராமம் மத்திய காலப்பகுதிக்குரியதாகும். இதன் பூகோள சிறப்பம்ச நிலை காரணமாக இந்த பகுதி வெகு காலமாக உலகிலிருந்து தனிமைப்பட்ட நிலையில்





காணப்பட்டது.

கிராமத்திலும் அதற்கு அருகாமையிலும் அமைந்துள்ள மெற்சியா மற்றும் புரொன்ட்டியர் ஆகிய கிராமங்களில் காணப்படும் உயரமான தேவாலயக் கோபுரங்கள் இந்த பகுதிக்கே உரிய சிறப்பம்சமாகும். இந்த கோபுரங்களை கிராமங்களில் ஆங்காங்கே காண முடியும்.

## மலையகத்தின் காவலாளிகள்

'ஸ்வென்கள்' என்போர் ஜோர்ஜியா என்ற நாட்டில் வாழ்ந்த ஜோர்ஜிய உப இனப்பிரிவாகும். இவர்களின் மொழி ஸ்வென். இந்த 'ஸ்வென்கள்' மலையகப் பாதுகாப்பு அரண்களின் பாரம்பரிய காவலாளிகளாக விளங்கினர். பண்டைய காலம் தொட்டு மோசமான காலநிலை மற்றும் சுற்றாடலை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்ட இவர்கள் உயரமான மலைப்பகுதிகளின் போராளிகளாகவும் திகழ்ந்தனர்.

## பாதுகாப்புக்கு நிர்மாணிக்கப்பட்ட கோபுரங்கள்

கற்குன்றுகள், பனிமலைகள் என்பன பரவலாக உள்ள இந்த பகுதியில் உள்ள வீடுகள் வெவ்வேறு இடங்களில் பரவி அமைந்திருந்தமையினால் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக ஒவ்வொரு வீடுகளுக்கும் கோட்டைகளைப் பாதுகாப்பது போன்ற பாதுகாப்பினை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

ஜோர்ஜியாவின் 'ஸ்வானெட்' கிராமத்தில் அமைந்துள்ள இந்த கோபுரங்கள் பாதுகாப்பு கோட்டைகளாகவும், வாழும் இடங்களாகவும், குடும்பங்களின் செல்வங்களைப் பாதுகாக்கும் இடங்களாகவும் திகழ்ந்துள்ளன. இந்த கோபுரங்களில் வழிபாட்டு ஆவணங்கள், மதச் சின்னங்கள் மற்றும் மத முக்கியத்துவம் கொண்ட சிதைவுகள் பாதுகாக்கப்பட்டிருந்தன. பொதுவாக, ஒரு கோபுரத்தில் 3 முதல் 5 மாடிகளைக் காண முடியும்.

'ஸ்வானெட்' கிராமத்தில் இருக்கின்ற உயரமான பல கோபுரங்கள் 9 முதல் 12 ஆம் நூற்றாண்டுக்குரியவையாகும். 'ஸ்வானெட்' கிராமத்தில் இருந்த உயரமான கோபுரங்கள், அரண்கள் நிர்மாணிப்புகள் ஐரோப்பாவுக்கும் பரவியது. எனினும், அதற்கு பின்னரான நீண்ட காலப்பகுதியிலும் இந்த கிராமத்தின் கோபுரங்கள் சிதையாமல் இருந்தன. இருப்பினும், அண்மைக்காலங்களில் இக்கிராமத்தவர்கள் ஜீவனோபாயத்திற்காக வசதியான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றதனையும் அவதானிக்க முடிகின்றது. இருந்த போதிலும், 'ஸ்வென்' கோபுரங்கள் பல இன்றும் பயன்படுத்தப்பட்டே வருகின்றன. 'ச்சஸ்ஹ' கிராமத்தில் மட்டும் 'ஸ்வென்' கோபுரங்கள் சுமார் 200 வரையில் உள்ளன.

இவ்வாறான கோபுரங்களை 'இந்த' மலைப்பகுதி முழுவதும் காண முடியும். எனினும், 'ஸ்வென்' கோபுரங்களைப் பார்ப்பதற்கு 'மெற்சியா' மாவட்டத்தின் 'உஷ்குலி' கிராமத்திற்கே செல்ல வேண்டியது அவசியமாகும்.

கிராமங்களில் உள்ள தேவாலயங்களின் சுவர்களில் காணப்படும் மத்தியகாலப் பகுதிக்குரிய ஓவியங்கள்



ஸ்வென் கோபுரங்களும் வீடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐரோப்பாவின் உயரமான கிராமம்




# ...வின் ...ில் ...ாமம்




## விடுகளின் அமைப்பு

பாதுகாப்பு கோபுரங்கள் கொண்ட வீடுகள் மலைச் சரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 'ஸ்வென்' வீடு இரண்டு மாடிகளைக் கொண்டது. கீழ் மாடி விறகு அடுப்பினைக் கொண்ட தனி அறையாக இருக்கும். இங்கு மனிதர்களும் வளர்ப்புப் பிராணிகளும் வசிக்க முடியும். மேல் மாடி மரப்பலகையினால் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அவை அதிசொகுசு முறையில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வீட்டின் மேல் மாடியில் உள்ள உயரமான கோபுரத்திற்குள் பிரவேசிக்கக்கூடிய பாதை ஒன்று இருக்கும்.

'ஸ்வென்கள்' இயற்கைச் சூழலை மதித்து இயற்கைக்கு ஏற்புடைய வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தவர்கள் என்பதனை அவர்கள் நிலப்பகுதியினை பயன்படுத்திய விதம் மற்றும், குடியிருப்புகளை நிர்மாணித்த விதத்தினைக் கொண்டு அனுமானித்துக்கொள்ள முடியும்.


வீட்டின் மேல் மாடியொன்று

## ஓவியம் வரைவோம்




## வாசகர்களே...

'விஜய்' பத்திரிகையில் நீங்கள் விரும்பி வாசிக்கும் அம்சங்கள் எவை? விரும்பாத அம்சங்கள் எவை? புதிதாக என்ன விடயங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறீர்கள்...?

உங்கள் கருத்துக்களை எமக்கு சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

'விஜய்' பத்திரிகையை மேலும் தரம் கூட்டுவதற்கு உங்கள் கருத்துக்கள் எமக்குப் பயன்தரும்.

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும்.

முகவரி:

'நமது கருத்துக்கள்'
'விஜய்'
த.பெ.இல - 2037
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ..........................................................

01) பின்வரும் கவிதையை வாசித்து விடை எழுதுக.

*மலருக்கு அழகு மணமாம்*
*மனிதனுக்கு அழகு நற்குணமாம்*
*உணவுக்கு அழகு சுவையாம்*
*உறவுக்கு அழகு ஒற்றுமையாம்*

*வாழ்வுக்கு அழகு இலட்சியமாம்*
*வெற்றிக்கு அழகு நேர்மையாம்*
*மன்னனுக்கு அழகு வீரமாம்*
*மாணவனுக்கு அழகு பணிவாம்*

01. மாணவனுக்கு அழகு எது?
..........................................................
02. வெற்றிக்கு அழகு எது?
..........................................................
03. நற்குணம் யாரிடம் இருத்தல் அவசியம்?
..........................................................
04. ஒற்றுமை என்பதன் எதிர்ப்பதம் யாது?
..........................................................
05. நற்குணம் என்பதை பிரித்தெழுதுக.
..........................................................
06. ஒவ்வொரு மாணவனிடத்திலும் இருக்க வேண்டியது யாது?
..........................................................
07. நாம் வெற்றியை அடைய என்ன செய்ய வேண்டும்?
..........................................................

02) பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.

01. நல்ல+செய்தி = ..........................................
02. நீலம்+வானம் = ..........................................
03. வடக்கு+திசை = ..........................................
04. ஐந்து+நூறு = ..........................................
05. கடல்+ஓரம் = ..........................................

03) இடைவெளியில் வரவேண்டிய சரியான எழுத்தைப் பயன்படுத்தி இடைவெளியை நிரப்புக.

01. பா..... ம் (ன, ந)
02. வே.....க்காரன் (லை, ளை)
03. தோ.....ணம் (ற, ர)
04. கு.....விக் கூடு (ல, ள)
05. அவ.....ட்சணம் (ள, ல)

04) பின்வரும் வாக்கியங்களை எதிர்ப்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

01. அரசி சிம்மாசனத்தை நோக்கி நடந்தாள்.
..........................................................
02. மாணவன் இனிமையாகப் பாடினான்.
..........................................................
03. வேலைக்காரன் தனது வேலைகளை செய்து முடித்தான்.
..........................................................

05) நீண்ட ஓசைச் சொற்களாக்கி எழுதுக.

01. குடு - ......................
02. வனம் - ......................
03. குடம் - ......................
04. மடு - ......................
05. படம் - ......................
06. வடு - ......................




06) அட்டவணையை நிரப்புக.

| சொல் | ஒத்தகருத்துள்ள சொல் | எதிர்க்கருத்துள்ள சொல் |
|---|---|---|
| உண்மை | ...................... | ...................... |
| வானம் | ...................... | ...................... |
| அரசன் | ...................... | ...................... |
| நாடு | ...................... | ...................... |
| போர் | ...................... | ...................... |

07) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதுங்கள்.

01. புகையிரதம் - புகையிரத நிலையம், கப்பல் - ........................
02. தாலாட்டுப் பாட்டு ............................. வகையைச் சேர்ந்தது.
03. பின்வருவனவற்றில் பிழையற்ற சொல்லின்கீழ் கீறிடுக.
மாணவன் உயர்தினை உரவு
04. வேடன் காட்டில் வேட்டையாடச் சென்றான். இங்கு எழுவாய்ச் சொல்- ..........................................
05. 'தேனிற் குழைத்த உணவிது' இத்தொடரைப் பிரித்தெழுதுக.
..........................................................
06. தினமும் வெளிவரும் செய்தித்தாளை ................................ என அழைப்பர்.
07. கத்தரி - செடிபோல; பூசணி - ..........................................
08. பசி - உணவு போல; தாகம் - ..........................................
09. நாங்கள் என்பதன் எதிர்ப்பதம் - ..........................................
10. பூனை எலியைத் துரத்திப் பிடித்தது. இது உணர்த்தும் காலம் ..........................................

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### புலமைப்பரிசில் விடைகள் - சுற்றாடல்

(ஒக்டோபர் 21 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

**01)**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 3 | 04. 3 | 07. 1 | 10. 1 | 13. 2 |
| 02. 2 | 05. 3 | 08. 3 | 11. 2 | 14. 1 |
| 03. 1 | 06. 2 | 09. 3 | 12. 1 | 15. 2 |

**02)**

| | |
|---|---|
| 01. திறந்து | 05. இலைகளை |
| 02. வல்லாரை | 06. கறையான்கள் |
| 03. முட்டை | 07. பாம்பு |
| 04. மரத்தால் | 08. வேப்பிலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம்-II

பாடம் 76

# வானொலி செய்திகள் அமைக்கப்படும் முறைகள்

வானொலி ஒலிபரப்பில் பல்சுவை நிகழ்ச்சிகள் ஏராளம் இருக்கின்றபோதிலும் இவை அனைத்திலும் இருந்து தனிப்பட்ட அடையாளமாக இருப்பது அவ்வவ் வானொலி நிலையங்களுக்குரிய செய்திகள் ஆகும். வானொலி செய்திகள் என்பது ஆரம்ப காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட



அளவிலேயே இருந்தது. இருப்பினும் நேயர்களின் ஆர்வம், ஈர்ப்பு, செய்திகளின் அதிகரிப்பு ஆகிய காரணங்களால் செய்தியானது, இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது.

இதற்கமைய, நாளடைவில் செய்திகள் காலை, பிற்பகல், மாலை, இரவு என நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் ஒளிபரப்பாகத் தொடங்கியது. வானொலி செய்திகளுக்கென ஒவ்வொரு வானொலி நிலையமும் ஆரம்ப குறியீட்டு இசைகளை அமைத்துக்கொண்டன. தத்தமது தனித்துவத்தை அடையாளப்படுத்தும் விதமாக அந்த குறியீட்டு இசைகள் வெவ்வேறு விதமாக அமைந்தன.

செய்திகளுக்கென ஒரு வரையறுக்கப்பட்ட காலநேரம் (Duration Time) இருப்பதுண்டு. அதாவது, முழு செய்தி அறிக்கையும் 10 நிமிடங்களையோ, அல்லது 15 நிமிடங்களையோ கொண்டதாக இருக்கும். இந்த நேரக் கட்டுக்குள் அமையக்கூடியவாறே, வானொலிக்கான செய்திகள் தொகுக்கப்படுகின்றன. இதற்கென தனியான ஒரு செய்திப்பிரிவே இருக்கும். இந்த செய்திப்பிரிவிற்கென பிரதானியாக ஒரு செய்தி ஆசிரியரோ, செய்தி தொகுப்பாளரோ இருப்பார். இவருக்கு அடுத்தபடியாக இன்னும் சில உதவியாளர்களும் இருப்பர். இவர்கள் அனைவரும் இணைந்து ஒரு குழுவாக செயற்பட்டே குறித்த



வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் அமையுமாறு செய்திகளை தொகுத்து அமைப்பர்.

பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு செய்திக்கும் ஒரு தலைப்பு இருப்பதுண்டு. ஆனால், வானொலி செய்தியிலோ அப்படியல்ல. ஒலிபரப்பாகவுள்ள செய்திகளுள் முக்கிய சில செய்திகளை மட்டும் குறித்துக் காட்டும் விதமாக செய்தி அறிக்கையின் ஆரம்பத்தில் தலைப்புச் செய்திகளாக அவை வாசிக்கப்படும். செய்திகளின் தலைப்பைத் தொடர்ந்து செய்திகள் அனைத்தும் ஒவ்வொன்றாக அணிவகுக்கப்படும். செய்திகளின் முடிவில் சில வானொலிகள் செய்திகளின் சாராம்சத்தைக் குறிப்பிடுவதுமுண்டு.

செய்தியின் முன்பாகத்தை கேட்கத் தவறியவர்களுக்காகவே அவ்வாறு சாராம்சம் வாசிக்கப்படுகின்றது. வானொலி செய்திகளைப் பொறுத்தவரையில் அச்செய்திகளின் உயிரோட்டம் அச்செய்தியினை வாசிப்பவரின் திறமையிலேயே தங்கியுள்ளது எனலாம். ஏனெனில், செய்திப் பிரிவினர் செய்திகளின் பிரதிகளை செய்தி அறிவிப்பாளரிடம் கொடுத்த பின்னர் அந்த செய்தியினை நன்றாகப் புரிந்துகொண்டும் உள்வாங்கிக்கொண்டும் சொற்தெளிவுடன் வாசிக்கும்போதுதான் செய்திகளை செவிமடுக்கும் வானொலி நேயர்களுக்கு செய்தியின் பயன் முழுமையாக கிடைக்கப்பெறும். ஆகையினால், வானொலியில் செய்தி வாசிப்பவர் சிறந்த பயிற்சிகளை கொண்டவராக இருத்தல் அத்தியாவசியமானதாக கருதப்படுகின்றது. சொற்பிறழ்வுகள் இல்லாமை, பதற்றம் இன்மை, அழுத்தம் திருத்தமாக வாசித்தல், நீண்ட நேரத்திற்கு மௌனத்தை கடைப்பிடிக்காமை, செய்தியையொட்டி தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்பை உணர்த்தாதவண்ணம் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் செய்திகளை வாசித்தல் போன்ற பல பண்புகளைக் கொண்டவராக செய்தி வாசிப்பாளர் இருத்தல் அவசியம்.

## நேரடி



வானொலி செய்திகள் என்பது எப்போதும் நேரடியாக ஒலிபரப்பாகுவதாகவே இருந்து வருகின்றது. இது ஒரு மரபாகவே தொடர்கின்றது. அதாவது, செய்திகள் எப்போதும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பாவதில்லை. மாறாக ஒலிபரப்புக் கூடத்தில் இருந்தவாறு நேரடியாக செய்தி வாசிப்பாளர் வாசிப்பதே செய்தியாக ஒலிபரப்பாகின்றது. இவ்வாறு செய்திகள் நேரடியாக ஒலிபரப்பாகி வருகின்றமைக்கு மரபுரீதியிலான முக்கிய ஒரு காரணம் உள்ளது. அதுவென்னவென்றால்; செய்திகளை எப்போதும் ஆறப்போடாமல் சுடச்சுட அவ்வப்போதே ஒலிபரப்பிவிடவேண்டும் என்ற நோக்கமே அது, அதாவது, ஒரு செய்தி அறிக்கை ஒலிபரப்பாகிக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் ஏதேனும் முக்கிய ஒரு நிகழ்வு, சம்பவம் நடைபெற்றுவிட்டால், அதனை உடனடியாக இந்த செய்தி அறிக்கையில் இடைநடுவில் சேர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால், அதுவொரு ஒலிப்பதிவாக இருந்தால் அவ்வாறு செய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதில்லை. எனவேதான், எப்போதும் செய்திகள் நேரடியாக ஒலிபரப்பாகி வருகின்றன.

(தொடரும்)

-ரிஷபன்

வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

14.10.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:
டிங்கிரி பண்டா விஜேதுங்க
Pen Drive வெற்றியாளர்:
எம்.என்.எஃப்.ரிகாஸா,
44, மஹாதென்ன,
குருத்தலாவை, வெலிமடை

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(28.10.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை
Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)
Sponsored: MYLOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women' Clothing Store)

இவ்வார கூப்பன்:
28.10.2015
விடை: ........................
பெயர்: ........................
முகவரி: ........................
தொ.பே.இல: ........................
பாடசாலை: ........................
தரம்: ........................
........................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்கள்



## வின்ஸ்டன் சேர்ச்சில்

இங்கிலாந்துடனும் இரண்டாம் உலக யுத்தத்துடனும் சேர் வின்ஸ்டன், லியோனாாட் ஸ்பென்சர் சேர்ச்சிலின் பெயர் பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். இருபதாம் நூற்றாண்டில் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஆளுமை உள்ள ஒருவராக அவர் விளங்கினார். இரண்டாம் உலகப் • போரில் நேச நாடுகளுக்குத் தலைமை தாங்கியதன்மூலம் இவர் பெரிதும் புகழ்பெற்றார்.

சேர்ச்சிலின் தந்தை ரான்டல்ப் சேர்ச்சில் மால்பரோ அரச பரம்பரையைச் சேர்ந்த பிரபுவாவார். 1874 ஆம் ஆண்டு நொவெம்பர் 30 ஆம் திகதி பிறந்த, படிப்பில் திறமை காட்டாத சேர்ச்சில் இராணுவத்தில் ஒரு தொழிலைப் பெற்றுக்கொண்டார். தென்னாபிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தில் யுத்த செய்தி சேகரிப்பவராக 'மோர்னிங் ஸ்டார்' பத்திரிகை சார்பாக சேர்ச்சில் தென்னாபிரிக்கா சென்றார். அங்கே கைதியாகப் பிடிபட்டார். எனினும், ஒருவாறு நாடு திரும்பினார். அதன்பின்னர் அரசியலில் ஈடுபட்டு நாடாளுமன்றப் பிரதிநிதியானார். 1906 இல் உதவி அமைச்சராகவும், 1911 இல் கடற்படை நிர்வாகக் குழுவில் முதற் பிரபுவாகவும் தெரிவானார். இவர் 1921 தொடக்கம் 1923 வரை குடியேற்ற நாடுகளின் செயலாளராகப் பதவி வகித்தார்.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகியபோது பிரித்தானிய அரசால் சகல கட்சி நாடாளுமன்றத்துக்கும் தலைமை தாங்க அழைக்கப்பட்டார். சட்ட சபையில் 1940 இல் நடாத்திய 'இரத்தக் கண்ணீர் வியர்வை' என்ற இவரது பேச்சு மிகவும் பிரசித்தி வாய்ந்தது.

இங்கிலாந்து மட்டுமின்றி முழு ஐரோப்பாவுமே ஜேர்மன் நாடுகளுக்கு அடிமைப்பட வேண்டிய ஒரு சிக்கலான கட்டத்தில், சேர்ச்சில் இங்கிலாந்து நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றார். ''நாங்கள் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் எதிரிகளோடு போரிடுவோம். ஒருபோதும் சரணடைய மாட்டோம்'' என்ற சேர்ச்சிலின் பேச்சு இங்கிலாந்து மக்களின் இதயங்களில் நம்பிக்கையை ஊட்டியது. ஆறு ஆண்டு கால கடும் யுத்தத்தின் பின் சேர்ச்சில் நேச நாடுகளை முடிவான வெற்றிக்குக் கொண்டு சென்றார்.

சிறந்த பேச்சாளரான சேர்ச்சில், 1953 இல் இலக்கியத்துக்கான பரிசையும் பெற்றுக்கொண்டார். இங்கிலாந்தின் செல்வாக்கை உலக நாடுகளில் பல வழிகளில் உயர்த்திய வின்ஸ்டன் சேர்ச்சில் 1965 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

## யார் இந்த கூர்க்காக்கள்...?



கூர்க்கா (Gurkha) என்பது நேபாளத்தில் உள்ள ஓர் இன மக்களைக் குறிக்கும் சொல்லாகும். இந்த வார்த்தை இந்துக் கடவுளான கோரக்நாத் என்ற வார்த்தையிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மேலும் இமயமலையின் ஒரு பகுதியான 'கூர்க்' பிரதேசத்தில் இந்த இன மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாக இந்தப் பெயர் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. நேபாளத்திலிருந்து இவர்கள் இந்தியாவிற்குள் குடியேறியவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தினால் இந்தியாவில் அமைக்கப்பட்ட ராணுவப்படையில் இந்த கூர்க்காக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் காரணமாகவே, கூர்க்காக்களின் பெயர் பிரபல்யம் பெற்றது. அதன்பின் பிரிட்டிஷ் படைப்பிரிவிலும் இவர்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் இந்திய சுதந்திரத்திற்கு பின்னர் பிரிட்டன் ராணுவத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இந்த கூர்க்கா படைப்பிரிவு 200 வருடங்கள் பழமையானது. கூர்க்காக்கள் 'குரி' என்னும் நீளமான வளைந்த கத்தியை எப்பொழுதும் தங்களுடன் வைத்துக்கொள்ளும் பழக்கம் உடையவர்கள். இந்திய இராணுவத்தில் ஒரு தனிப் படைப் பிரிவாக இவர்கள் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அலிபாபாவும் 40 திருடர்களும்

24


கதை, ஓவியம்: வேணு வாரியத்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# மிக உயரமான இடத்தில் நடாத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி






'உலகின் மிகவும் உயரமான இடத்தில் நடாத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி' என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எவரெஸ்ட் மரதன் ஓட்டப் போட்டி, எதிர்வரும் நொவெம்பர் மாதம் எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் நடைபெறவுள்ளது. எவரெஸ்ட் மலைச்சிகரப் பகுதியில் 5,184 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள கோரக் ஷெப் என்ற இடத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் போட்டி, நம்ச்சே பஸார் எனும் ஷர்ப்பா நகரில் முடிவடையும். கரடுமுரடான மலைப்பாங்கான பகுதி வழியே இடம்பெறவுள்ள இந்த ஓட்டப் போட்டிப் பாதை 42.2 கி.மீற்றர் நீளம் கொண்டதாகும்.

1987 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் ஆரம்பமான இந்தப் போட்டி, தற்போதளவில் 15 தடவைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இப்போட்டி நடாத்தப்படுகின்றது. இம்முறை இடம்பெறுவது அதன் 16 ஆவது போட்டியாகும். ஐக்கிய ராச்சியத்தின் அறக்கட்டளை




அமைப்பான பூஃபோ வென்ச்சஸ் லிமிடெட் அமைப்பே இந்த மரதன் ஓட்டப் போட்டியை ஏற்பாடு செய்கின்றது. இதன் மூலம் கிடைக்கும் நிதியானது, நேபாளத்தின் கிராமப்புறங்களில் சுகாதாரம் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்றது.

இந்த மரதன் ஓட்டப்போட்டியின் பெரும்பாலான பகுதிகள் ஏறி - இறங்கி ஓடவேண்டியதாக இருப்பதனால், இதில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் மலைகளைக் கடந்த அனுபவம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞாயிற்றுத் தொ... மறைந்த கிரக...

எமது ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து வெளியே வீசப்பட்ட ஒரு கிரகம் குறித்து அண்மையில் வானியல் விஞ்ஞானிகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். ஞாயிற்றுத் தொகுதிக்குரிய கிரகமான நெப்டியூனுடன் மோதியதாலேயே, அந்த கிரகம் வெளியே வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கிரகம் ஒரு வாயுக் கிரகம் (வாயு ராட்சதன்-gas giant) ஆகும். இதன்படி ஞாயிற்றுத் தொகுதியின் வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய நான்கு வாயுக் கிரகங்களுடன், ஐந்தாவது வாயுக் கிரகமாக அந்தக் கிரகம் கருதப்படுகின்றது.





பாறைத் துண்டுகள் உள்ளன. அவற்றை ஆய்வுசெய்தபோது, வியாழன் கிரகத்தின் சுற்றுப்பாதையானது அதற்குரியதன்று எனவும், வேறொரு சுற்றுப்பாதையிலேயே அது பயணிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. ஆக, ஏதோ ஒரு பாரிய விண்பொருள் ஒன்றுடன் மோதியதாலேயே அதன் சுற்றுப்பாதை மாறியுள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அந்த பொருள்தான் நெப்டியூனுடன் மோதிய அந்த வாயுக் கிரகமாக இருக்கலாம் எனவும் அனுமானிக்கப்படுகின்றது.

## குய்ப்பர் வளையத்தில் மறைந்துள்ள மர்மம்

சூரியனை பிரதானமாகக் கொண்டு அதனைச் சுற்றி வரும் கிரகங்கள், குறுங்கிரகங்கள், சந்திரன், வால்வெள்ளி, உடுக்கள் மற்றும் விண்கற்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தொகுதியே ஞாயிற்றுத் தொகுதி ஆகும். குய்ப்பர் வளையம் என்பது, ஞாயிற்றுத் தொகுதிக்கு அப்பால் புளூட்டோ எனப்படும் குறுங்கோளையும் தாண்டி அமைந்துள்ள சிறு விண் பொருட்கள், விண்கல் துண்டுகள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். சூரியனில் இருந்து சுமார் 4 பில்லியன் மைல்களுக்கும் அப்பாலேயே இது அமைந்துள்ளது.

ஞாயிற்றுத் தொகுதி உருவாகும் போது, விண்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று மோதி- வெடிப்புகள் ஏற்பட்டதனால் எஞ்சிய சிதைவுகளே, இந்த வளையத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது. குய்ப்பர் வளையத்தில் 3,300 இற்கும் அதிகமான விண்கற்கள் மற்றும் எரிகற்களின் துண்டுகள் இருப்பதாக வானியல் விஞ்ஞானிகளால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இங்கு 3 குறுங்கோள்கள் இருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 'ஞாயிற்றுத் தொகுதி உருவாகும் பொழுது சிந்தப்பட்ட இரத்தக் கறை' என குய்ப்பர் வளையத்தைக் குறிப்பிடலாம் என்று வானியல் விஞ்ஞானியான மைக் ப்ரவுன் என்பவர் கூறுகிறார். இவர் கெலிஃபோர்னியாவின் கெல்டெக் வானியல் விஞ்ஞான நிறுவனத்தின் பேராசிரியராவார்.

## நியூ ஹொரைசன்

கடந்த ஜூலை 14 ஆம் திகதி நியூ ஹொரைசன் ஆய்வுக்கலம் புளூட்டோவுக்கு அருகில் பயணித்தபடி புகைப்படங்களை எடுத்து அவற்றை பூமிக்கு அனுப்பியது. அதன்பின் அந்த ஆய்வுக்கல...

ஞாயிற்றுத் தொகுதிக்கு அப்பால் உள்ள குய்ப்பர் வளையத்தில் தற்போது இந்த கிரகம் மறைந்து இருக்கலாம் என விஞ்ஞானிகள் சந்தேகிக்கின்றனர். அது தொடர்பாக, தமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். குய்ப்பர் வளையத்தில் 'கர்னெல்' என அழைக்கப்படும் பனிக்கட்டிப்

ஆய்வுக்கல...
வளையத்தை...
இந்த வளை...
அனுப்பப்ப...
ஆய்வுக்கல...
ஆகும். அத...
வளையம் ...
புகைப்படங்...
விஞ்ஞானிக...
வாய்ப்பு நியூ...
ஆய்வுக்கலத்...

## வாயுச்...

எமது சூரி...
வாயுக் கிரகங்...
நான்கு ஆகு...
யுரேனஸ், ...
நான்குமே இ...
கிரகங்களாகு...

ஐதரசன், ஹீ...
இருப்பதோடு...
நிறைந்த் வளி...

## ஐ...
## -வாயு...

எமது ஞாய...
உள்ள நான்கு...
களுக்கு மேல...
வாயுக் கிரக...
ளது. அந்த ஐ...
மானது; விய...
மற்றும் நெப்...
றின் சகோதர...
கள் தெரிவிக்...
சகோதரன் எ...
தொகுதி உரு...
திலேயே வெ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்
நிறைந்த
னில்
யே
வாகும்
ஒன்று
ப்புகள்
தைவு
இருப்ப
ப்பர்
ம்
ற்றும்
ர

ஆய்வுக்கலம் குய்ப்பர் வளையத்தை நோக்கிச் சென்றது. இந்த வளையத்தில் ஆய்வுக்காக அனுப்பப்பட்ட முதலாவது ஆய்வுக்கலம் நியூ ஹொரைசன் ஆகும். அதனையடுத்து, இந்த வளையம் தொடர்பான பல புகைப்படங்களை புவியில் உள்ள விஞ்ஞானிகளுக்கு அனுப்பும் வாய்ப்பு நியூ ஹொரைசன் ஆய்வுக்கலத்திற்கு கிடைத்தது.

### வாயுக் கிரகங்கள்

எமது சூரிய குடும்பத்திலுள்ள வாயுக் கிரகங்கள் (gas giants) நான்கு ஆகும். வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய நான்குமே இந்த வாயுக் கிரகங்களாகும். இவற்றில்


வீசப்பட்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

### நெஸ்வோனியின் கருத்து

அமெரிக்காவின் கொலராடோ பிராந்தியத்தின் 'சவுத் வெஸ்ட்' ஆய்வு நிறுவனத்தின் வானியல் விஞ்ஞானியான டேவிட் நெஸ்வோனி, இந்த வாயுக் கிரகம் குறித்து சில முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளார். குய்ப்பர் வளையம் மூலம் எமக்கு சிறந்த ஆதாரம் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், அங்குள்ள துண்டுகளே அந்த ஆதாரங்களாகும் என்றார். அவற்றை வைத்து, ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து வீசப்பட்ட வாயுக் கிரகமானது,

அந்த கணினி மாதிரிப்பட ஆய்வின்மூலம் அறிந்துகொள்ளலாம். அத்துடன், அந்த வாயுக் கிரகம் வெளியேறியது எவ்வாறு என்பதனையும் கணினி மாதிரிப்படம் மூலம் ஆராயப்பட்டு வருகின்றது. மேலும் 'கர்னெல்' எனப்படும் பனிக்கட்டிப் பாறைத் துண்டுகள் பில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன் நெப்டியூனின் ஈர்ப்புச்சக்திக்கு உட்பட்டிருக்கும் என்றும், பின்னர் சிறிது சிறிதாக சூரியனில் இருந்து தூர விலகி இன்றிருக்கும் இடத்திற்கு வந்திருக்கும் என்றும் நெஸ்வோனி கூறுகின்றார்.

# ...த் தொகுதிக்குரிய ...ிரகத்தின் மர்மம்




து.
வாகும்
ந்தக்
ாயத்
மைக்
ர். இவர்
கல்டெக்
வனத்தின்
சன்
திகதி
கலம்
ங்களை
அந்த

ஐதரசன், ஹீலியம், பனிக்கட்டிகள் இருப்பதோடு, வாயு-முகில்கள் நிறைந்த வளிமண்டலமும் உள்ளது.

### ஐந்தாவது வாயுக் கிரகம்

எமது ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள நான்கு வாயுக் கிரகங்களுக்கு மேலதிகமாக ஐந்தாவது வாயுக் கிரகமொன்று இருந்துள்ளது. அந்த ஐந்தாவது வாயுக் கிரகமானது; வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் போன்றவற்றின் சகோதரன் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்த சகோதரன் எமது ஞாயிற்றுத் தொகுதி உருவான ஆரம்ப காலத்திலேயே வெளியே

குய்ப்பர் வளையத்தினுள் மறைந்திருப்பதாக எம்மால் அனுமானிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

### கணினி மாதிரிப்படம்

மதிப்பீடு ஒன்றின்படி உருவாக்கப்பட்ட கணினி மாதிரிப் படமொன்றை அடிப்படையாக வைத்தே, வானியல் விஞ்ஞானியான நெஸ்வோனி மறைந்துள்ள வாயுக் கிரகம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார். குய்ப்பர் வளையத்தில் உள்ள கிரகத்துண்டுகளை 4 பில்லியன் வருடங்களுக்கு பின்நோக்கி நகர்த்தி, அப்பொழுது அவை எந்தநிலையில் இருந்திருக்கும் என

நெப்டியூன் கிரகம் சூரியனைச் சுற்றும் பயணப் பாதையும் இப்பொழுது மாற்றம் அடைந்துள்ளது. ஒரு பாரிய விண்பொருளின் ஈர்ப்புச் சக்தியாலேயே இத்தகைய நிகழ்வுகள் நடக்க வாய்ப்புள்ளது. அந்த பாரிய விண்பொருள் ஒரு ராட்சதக் கிரகமாக இருக்கலாம் என நெஸ்வோனி கூறுகின்றார். எனவே, ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து வெளியே வீசப்பட்டு, மறைந்துள்ள அந்த மர்மக் கிரகத்தைக் கண்டுபிடிப்பதே விஞ்ஞானிகளின் அடுத்த இலக்காக உள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்



# இலைகளின் நிறம் மாறும் இலையுதிர் காலம்

*வசந்த காலம், கோடை காலம், குளிர் காலம், இலையுதிர் காலம் ஆகிய நான்கு பருவ காலங்களில், இலையுதிர் காலம் சிறப்பு மிக்கதாகும். பூத்துக் குலுங்கிய மரங்கள், இலையுதிர் கால பருவத்தில் தம் நிறங்களை மாற்றி வியப்பினைத் தருகின்றன. மரங்களின் பச்சை இலைகள் அவற்றின் நிறங்களை சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், மண்ணிறம் என்று நாளுக்கு நாள் மாற்றும் அதிசயத்தினை இலையுதிர் காலத்திலேயே கண்டுகளிக்க முடிகின்றது.*

கோடை காலத்தின் முடிவுக்கும் குளிர் காலத்தின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட பருவ காலமே இலையுதிர் காலமாகும். இலையுதிர் காலத்தினை 'Autumn' என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். Fall (வீழ்ச்சி/உதிர்வு) என்றும் இந்த காலப்பகுதியினை மேற்கத்தேயர்கள் அழைக்கின்றனர். இந்த காலத்தில், குறிப்பாக, மேற்கத்தேய நாடுகளில் இந்த மாற்றத்தினை நன்கு அவதானிக்க முடியும். ஐரோப்பிய நாடுகளில் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கும் இலையுதிர் காலம் டிசம்பர் நடுப்பகுதி வரை நிலவும். இதனையடுத்து மெல்ல மெல்ல குளிர்காலம் தலைதூக்கும். இக்காலத்தில் இரவுப் பொழுது அதிகமாக காணப்படும்.

இலையுதிர் காலத்திற்குரிய மெல்லிய வாடைக் காற்று மரங்களின் இலைகளை உதிரச் செய்து வர்ண மயமான இலைக் குவியல்களை பாதைகளில் ஏற்படுத்திவிடுகின்றன. இவை பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமான காட்சிகள்ாகும். இலையுதிர் கால முடிவில் மரங்கள் யாவும் இலைகளை உதிர்த்து வெறும் காம்புகளாக தோன்றும்.

பொதுவாக, இலையுதிர் காலம் குளிர் காலத்தின் ஆரம்பம் என்பதால், மரங்களில் புதிய பூக்கள்-இலைகள் உருவாவதில்லை. ஆதலால், இக்காலப்பகுதி மந்தமான காலப்பகுதியாகவே கருதப்படுகின்றது. அப்பிள் போன்ற ப்ழ மரங்களிலிருந்து பழங்கள் உதிரத் தொடங்கும். பொதுவாக, மேற்கத்தேய நாடுகளில் இக்காலப்பகுதி அறுவடைக் காலமாகவே கருதப்படுகின்றது. பூசணிகளுக்கான அறுவடைக்காலமும் இதுவாகும்.

-பிரியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவை எதிர்கொண்டுள்ள மரபுரிமைத் தலம் ‘பெல்மைரா’




பெல்மைரா இடிபாடுகள்



செய்மதிப் படங்கள் காட்டும் பெல்மைரா அழிவுகள்

பெல்மைரா அமைவிடம்




*‘பெல்மைரா’ என்பது ஒரு புராதன நகரமாகும். சிரியா பாலைவனத்திற்குட்பட்ட பாலைவனச் சோலையிலேயே இது அமைந்துள்ளது. இது, புராதன உலக மரபுரிமை நகரமாகத் திகழ்வதோடு, சிரியாவின் மிகப் பிரதான சுற்றுலாத் தலமாகவும் காணப்படுகின்றது.*

புராதன காலத்தில் இந்நகரை ‘பாலைவனத்தின் மணமகள்’ என அழைத்தனர். பாலைவனச் சோலையில் அமைந்திருந்தமையே இவ்வாறு அழைப்பதற்கான காரணமாகும். சிரியா பாலைவனத்தை பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் பிரதான தங்குமிட மையமும் இதுவே ஆகும். மேலைத்தேய மற்றும் கீழைத்தேய பொருளாதார, கலாசார மற்றும் சமூக மத்தியநிலையமாகவும் இந்நகரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## பெல்மைராவின் வரலாறு

பெல்மைரா என்பது ‘நகரம்’ எனும் அர்த்தத்தைத் தரும் ஒரு கிரேக்கச் சொல்லாகும். டிபேரியஸ்ஸின் ஆட்சிக்காலத்திலேயே பெல்மைரா கட்டி எழுப்பப்பட்டுள்ளது. பாரசீகம், இந்தியா, சீனா மற்றும் ரோமானியப் பேரரசின் வர்த்தகப் பாதையில் இந்நகரம் அமைந்திருந்ததோடு, பட்டுப்பாதையின் முக்கிய வணிக நகரமாகவும் இருந்தமையால், மிக விரைவாகவே முக்கியத்துவம் மிக்க நகரமாக இது பரிணமித்தது. பின்னர் ஒட்டோமன் பேரரசின் எழுச்சியுடன் அதன் முக்கிய நகரங்களுள் ஒன்றாகியது. கி.பி.129 ஆம் ஆண்டளவில் ஹேட்ரியன் எனும் பேரரசன் பெல்மைரா நகரை பார்வையிட வருகை தந்தான். இந்த நகரைக் கண்டு வியப்படைந்த பேரரசன், அந்நகருக்கு ‘பெல்மைரா ஹேட்ரியானா’ என்று பெயரிட்டான்.

கி.பி. 212 இல் கெரகலா எனும் பேரரசனால் இது ரோமானிய காலனித்துவ நகராகியது. அதன் பின் பெல்மைராவுக்கு ரோமாபுரிக்கு சமமான உரிமை வழங்கப்பட்டது. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளை பெல்மைரா நகரின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். அக்காலகட்டத்தில் நகரில் மிகப்பெரிய கட்டடங்களும் தூண்களும் நினைவுச் சின்னங்களும் நிறுவப்பட்டன. பெல் தேவாலயம், எங்கோரா கலை அரங்கு, டியொக்லெஷியன் மூகாம் எனும் ராணுவத் தொகுதி உட்பட, தேவாலயங்களும் பிரதான கட்டடங்களும் இக்காலத்தில் இங்கு கட்டியெழுப்பப்பட்டன.


பெலியோலிதிக் மற்றும் நியோலிதிக் யுகத்தில் இருந்தே இந்த நகர வலயத்தில் மக்கள் குடியிருப்புகள் இருந்துள்ளன.

## இடிபாடுகள்

பெல்மைரா நகரின் இடிபாடுகளை ஆராய்ந்ததை அடுத்து, அதுவொரு திட்டமிடப்பட்ட விசாலமானதொரு புராதன நகரம் என தெரியவந்துள்ளது. அங்கிருந்து கிடைத்த அனைத்து நினைவுச் சின்னங்களிலும் கொரிந்திய கலை அம்சங்களை காணக் கூடியதாக இருந்ததோடு, மெசப்பொத்தேமிய, ஈராக்கிய கட்டட நுணுக்கங்களையும் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

பெல்மைரா உலக மரபுரிமை நகரமாகவும் திகழ்கின்றது.





இங்குள்ள பெல் தேவாலயமானது, பெல்மைராவின் இடிபாடுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது சுமார் 2,000 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான வரலாற்றைக் கொண்டுள்ளது. யுனெஸ்கோ கலாசார மத்திய நிலையத்தின் கருத்தின் படி, பெல்மைரா நகரமானது, புராதன நாகரிகங்கள் பல சங்கமமாகும் ஓர் இடமாகும். மத்திய கிழக்கு வலயத்தின் கி.பி. முதலாவது நூற்றாண்டுக்குரிய மிகப் பெறுமதியான சமய நினைவுச் சின்னம் இதுவாகும் என யுனெஸ்கோ பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

## போரினால் அழியும் அபாயம்

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக, பெல்மைரா புராதன நகரின்மீதும் அண்மையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும், அங்குள்ள நினைவுச் சின்னங்கள் அழிவடையவில்லை என தெரிவிக்கப்பட்டாலும், தாக்குதலுக்கு முன்னர் மற்றும் பின்னரான செய்மதிப் படங்களில் அழிவுகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், முன்னர் அங்கிருந்த சிலைகளை பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தியதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

-அ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மெதுவாக கரையக்கூடிய புதுவகை ஐஸ்கிறீம்!

வேகமாகக் கரையும் ஐஸ்கிறீமை அவசர அவசரமாக சுவைத்து உட்கொண்ட காலத்திற்கு விடை கொடுத்து விட்டு மிகவும் மெதுவாகக் கரையும் ஐஸ்கிறீமினை பிரித்தானிய விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் தற்போது உலகுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளனர். ஜப்பானின் காலை ஆகாரம் ஒன்றினை அடிப்படையாக வைத்தே இந்த ஐஸ்கிறீம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.



## நெற்றோ

'சோயா' அவரையிலிருந்து பெறப்படும் ஒரு வகை புரதமே இதற்கு பயன்படுகின்றது. சோயா அவரையானது சோறுடன் கலக்கப்படும்போதே அது 'நெற்றோ' என அழைக்கப்படுகின்றது. நாம் காலையில் பயறு, பாற்சோறு உண்பதுபோல் ஜப்பானியர்கள் 'நெற்றோ' வினை காலையில் உட்கொள்கின்றனர். இந்த புரதம் ஒட்டும் தன்மை கொண்டது. மற்றைய மூலகங்களைப் பிணைத்து வைத்துக்கொள்ளும் ஆற்றலும் அதற்கு உண்டு. இந்த புரதத்தினை 'பயோபிலிம் சர்பேஸ்லெவல் A' என்று அழைக்கின்றனர். காற்றுக்குமிழ்களை ஒன்றுடன் ஒன்று பிணைத்து வைத்துக்கொள்ளும் ஆற்றல் இந்த புரதத்திற்கு உண்டு. "இந்த ஐஸ்கிறீம் உலகம் முழுவதும் கவனத்தினை ஈர்க்கும் என்பது எமது நம்பிக்கையாகும். முதலில் இந்த புரதத்தினைப் பயன்படுத்தி நாம் ஐஸ்கிறீம் தயாரிப்போம். பின்னர் உலகின் பிரதான ஐஸ்கிறீம் உற்பத்தியாளர்கள் புதிய புரதக் கலவையினைப் பயன்படுத்துவர் என்று நம்புகின்றோம்" என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## புரதம்

புதிய ஒரு புரத வகையினைப் பயன்படுத்தியே இந்த ஐஸ்கிறீமினை ஆய்வாளர்கள் தயாரித்துள்ளனர். இதன்படி இந்த ஐஸ்கிறீம் இலகுவில் கரைந்துவிடாமல் நீண்ட நேரம் நிலைத்திருக்கும். இந்த விசேட புரதம் ஜப்பானிய பிரபல்யமான காலை உணவாக கருதப்படும் 'நெற்றோ' எனும் உணவில் இயற்கையாக உருவாவதாகும். இதனை ஐஸ்கிறீமில் கலப்பதன்மூலம் இலகுவில் ஐஸ்கிறீம் கரையாது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அது மட்டுமன்றி கடும் வெப்பத்திலும் இந்த ஐஸ்கிறீம் கரையாது சுவையுடன் இருக்கும். இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் இந்த ஐஸ்கிறீம் விற்பனைக்கு வரவுள்ளது.



## ஐஸ்கிறீமின் வரலாறு

ஐஸ்கிறீமைக் கண்டுபிடித்தது யார் என்று இதுவரை எவருக்கும் தெரியாது. பண்டைய காலத்தில் சீனர்கள் அரிசிச் சோற்றுத் தட்டில் பசும்பாலினை ஊற்றி அதனை பனியில் இறுக வைத்து ஒருவகை உணவினை தயாரித்துக்கொண்டனர். இதுதான் ஐஸ்கிறீமின் ஆரம்பம் என்று கூறலாம். பனி மற்றும் உப்பு பானைகளில் பாலினை இட்டு அதில் சீனியைக் கரைத்து ஐஸ்கிறீம் உருவாக்கும் கருவியினையும் பண்டைய சீனர்கள் பயன்படுத்தியுள்ளனர். பேரரசன் மகா அலெக்சாண்டரும் பனியும் தேனும் கலந்த ஐஸ்கிறீம் சாப்பிடுவதில் ஆர்வம் கொண்டவராம்.

சீனாவுக்கு சென்றிருந்த தேசசஞ்சாரி 'மாக்கோ போலோ' ஐஸ்கிறீம் பற்றிய அறிவினை இத்தாலிக்கு எடுத்து வந்ததன் மூலமே இன்று நாம் உட்கொள்ளும் ஐஸ்கிறீம் உலகம் முழுவதும் பரவியதாக கூறப்படுகின்றது. 1600 களில் இங்கிலாந்தின் முதலாவது சார்ள்ஸ் மன்னரும் ஐஸ்கிறீம் உட்கொள்வதில் ஆர்வம் மிக்கவராம்.

## செயற்கைத் தயாரிப்பு

பிரித்தானியாவின் எடின்பரோ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் மற்றும் 'டன்டி' பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோர் இணைந்து 'பயோபிலிம் சர்பேஸ்லெவல் ஏ' என்ற செயற்கை புரதம் குறித்த ஆய்வுகளை பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்திருந்தனர். எடின்பரோ பல்கலைக்கழகத்தின் பௌதீக மற்றும் வானியல் விஞ்ஞானி பேராசிரியர் கெயிட்டி மெக்பி இது பற்றி கருத்துத் தெரிவிக்கும்போது, "ஐஸ்கிறீமினை மாற்றும் புதிய புரதம் ஒன்றினை கண்டுபிடிப்பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். உண்மையில் இது ஒரு புதிய கண்டுபிடிப்பாகும். ஐஸ்கிறீம் சுவைஞர்களுக்கு மட்டுமன்றி, உற்பத்தியாளர்களுக்கும் இது ஒரு மகிழ்வூட்டும் செய்தியாகவே அமையும் என்று குறிப்பிடுகின்றார். மேலும், பக்டீரியாவினை மாற்றி அதனைப் பயன்படுத்தும் புதிய புரதத்தினால் ஐஸ்கிறீமினை உற்பத்தி செய்வது என்பது உண்மையில் வியப்பான விடயமாகும் என்று கலாநிதி நிக்கொலா ஸ்டான்லி வேல் என்பவர் குறிப்பிடுகின்றார். இவர் 'டன்டி' பல்கலைக்கழகத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் ஆய்வுக் குழு உறுப்பினராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

දුව: **අම්මේ! අද ශිෂ්‍යත්වය ප්‍රතිඵල ආවා.**
அம்மே! அத ஷிஷ்யத்வய ப்ரதிபல ஆவா.
மகள்: **அம்மா! இன்று புலமைப்பரிசில் பெறுபேறு வந்தது.**

අම්මා: **ඇත්තද දුව? ඔයා පාස් ද?**
எத்தத துவ? ஒயா பாஸ் த?
அம்மா: **அப்படியா மகள்? நீங்கள் சித்தியடைந்திருக்கிறீர்களா?**

දුව: **ඔව් අම්මේ. මම පාස්. ලකුණු 180 තියෙනවා.**
ஒவ் அம்மே. மம பாஸ். லகுணு 180 தியெனவா.
மகள்: **ஆம் அம்மா. நான் சித்தியடைந்துள்ளேன். 180 புள்ளிகள் கிடைத்துள்ளன.**

අම්මා: **ඇත්තද..? මගේ හොඳ දුව. තාත්තාට හරි සතුටු හිතෙයි. අපි තාත්තාට කෝල් කරල කියමු.**
எத்தத...? மகே ஹொந்த துவ. தாத்தாட்ட ஹரி சதுட்டு ஹிதெய். அப்பி தாத்தாட்ட கோல் கறல கியமு.
அம்மா: **அப்படியா...? என் நல்ல மகள். அப்பா மிகவும் சந்தோஷப்படுவார். நாம் அப்பாவுக்கு கோல் எடுத்துச் சொல்வோம்.**

දුව: **එපා අම්මේ. අපි තාත්තා ආවාම කියමු.**
எப்பா அம்மே. அப்பி தாத்தா ஆவாம கியமு.
மகள்: **வேண்டாம் அம்மா. நாம் அப்பா வந்ததும் சொல்வோம்.**

අම්මා: **දුවට දැන් හොඳ පාසලකට යන්න පුළුවන්.**
துவட்ட தென் ஹொந்த பாசலகட்ட யன்ன புலுவன்.
அம்மா: **இப்போது மகளுக்கு நல்லதொரு பாடசாலைக்குப் போக முடியும்.**

දුව: **වෙන පාසලකට යන්න මම ආස නැහැ අම්මේ.**
வென பாசலகட்ட யன்ன மம ஆச நெஹெ அம்மே.
மகள்: **வேறொரு பாடசாலைக்குப் போக எனக்கு விருப்பம் இல்லை அம்மா.**

**මට මේ පාසල හොඳයි.**
மட்ட மே பாசல ஹொந்தய்.
**எனக்கு இந்தப் பாடசாலை நல்லம்.**

අම්මා: **ඒ ඇයි දුව?**
ஏ எய் துவ?
அம்மா: **அது ஏன் மகள்?**

**තාත්තා නම් කැමති ඔයා වෙන පාසලකට යනව නම්.**
தாத்தா நம் கெமதி ஒயா வென பாசலகட்ட யனவ நம்.
**நீங்கள் வேறு பாடசாலைக்குப் போவதுதான் அப்பாவின் விருப்பம்.**

දුව: **අනේ අම්මේ! අම්මා තාත්තාට කියන්නකෝ.**
அனே அம்மே! அம்மா தாத்தாட்ட கியன்னகோ.
மகள்: **ஐயோ அம்மா! நீங்கள் அப்பாவிடம் சொல்லுங்களேன்.**

අම්මා: **හොඳයි, තාත්තා ආවාම අහලා බලමු.**
ஹொந்தய், தாத்தா ஆவாம அஹலா பலமு.
அம்மா: **நல்லது. அப்பா வந்ததும் கேட்டுப் பார்ப்போம்.**



### பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. **இன்று பெறுபேறு வந்தது.**
..............................................

ii. **நான் சித்தியடைந்துள்ளேன்.**
..............................................

iii. **இந்தப் பாடசாலை நல்லம்.**
..............................................




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**'Because'** எனும் இணைக்கும் சொல்லைக் (Joining word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) Vijitha did not buy that book.
விஜிதா அந்தப் புத்தகத்தை வாங்கவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஆ) She did not have money.
அவளிடம் பணம் இருக்கவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ Vijitha did not buy that book because she did not have money.
விஜிதா அந்தப் புத்தகத்தை வாங்கவில்லை; ஏனெனில், அவளிடம் பணம் இருக்கவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

இ) I could not meet Ragujan.
என்னால் ரகுஜனை சந்திக்க முடியவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஈ) He did not come there on time.
அவன் அங்கே உரிய நேரத்துக்கு வரவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ I could not meet Ragujan because he did not come there on time.
என்னால் ரகுஜனை சந்திக்க முடியவில்லை; ஏனெனில், அவன் அங்கே உரிய நேரத்துக்கு வரவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

உ) You will have a holiday on Wednesday.
நீ புதன்கிழமை அன்று விடுமுறை ஒன்றைப் பெறுவாய்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஊ) It is Republican day.
அன்று குடியரசு தினம் ஆகும்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ You will have a holiday on Wednesday because it is Republican day.
புதன்கிழமை அன்று குடியரசு தினம் என்பதால், நீ அன்று விடுமுறை ஒன்றைப் பெறுவாய்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

எ) Ravi got the first prize.
ரவி முதலாவது பரிசைப் பெற்றான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஏ) He is very clever.
அவன் மிகவும் புத்திசாலி ஆவான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ Ravi got the first prize because he is very clever.
ரவி மிகவும் புத்திசாலி என்பதால், முதலாவது பரிசைப் பெற்றான்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

**குறிப்பு:** ✱ did not meet என்றால் சந்திக்கவில்லை.
✱ could not meet என்றால் சந்திக்க முடியவில்லை.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கலந்துகொள்ளும் கிரிக்கெட் தொடர்...




## அமெரிக்காவில் அடுத்த வாரம் ஆரம்பம்

ஓய்வுபெற்ற கிரிக்கெட் வீரர்கள் கலந்துகொள்ளும் 'டுவென்டி டுவென்டி' போட்டித் தொடரொன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

அமெரிக்காவில் கிரிக்கெட் போட்டிகளை பிரபல்யப்படுத்தும் நோக்கிலேயே, இந்த கண்காட்சி கிரிக்கெட் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதலாவது போட்டி நொவெம்பர் 7 இல் நியூயோர்க்கிலும் இரண்டாவது போட்டி நொவெம்பர் 11 இல் ஹூஸ்டனிலும், மூன்றாம் போட்டி நொவெம்பர் 14 இல் லொஸ் ஏன்ஜல்ஸிலும் நடைபெறவுள்ளது.

இதில் ஒரு அணிக்கு இந்தியாவின் சச்சின் டென்டுல்கர் தலைவராகவும், மற்றைய அணிக்கு அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் தலைவராகவும் பணியாற்றுவர். இதற்கமைய, டென்டுல்கரின் அணிக்கு 'சச்சின் பிளாஸ்டர்' எனவும், ஷேன் வோர்னின் அணிக்கு 'வோன் வோரியஸ்' எனவும் பெயரிடப்பட்டுள்ளது.




இரண்டு அணிகளிலும் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களும் தற்போது சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களாவர்.

மேலும், இப்போட்டிகளில் இந்தியாவின் டென்டுல்கருடன் கங்குலி, வி.வி.எஸ்.லக்ஷ்மன், அகர்கர்... அவுஸ்திரேலியாவிலிருந்து ஷேன் வோர்னுடன் ரிக்கி பொன்டிங், மெத்யூ ஹேடன், மெக்ராத், பிராட் ஹெடின்... தென்னாபிரிக்காவிலிருந்து ஜெக் கெலிஸ், ஷோன் பொலொக், குளுஸ்னர், ஜொன்டி ரொட்ஸ், எலன் டெனால்ட்... இங்கிலாந்திலிருந்து கிரஹம் ஸ்வோன், மைக்கல் வோன்... மேற்கிந்திய தீவுகளிலிருந்து பிரயன் லாரா, கேட்னி வோல்ஷ், கேர்ட்லி எம்ப்ரோஸ், கார்ல் ஹூப்பர்... இலங்கையிலிருந்து சங்கக்கார, மஹேல, முரளிதரன்... பாகிஸ்தானிலிருந்து வசீம் அக்ரம், ஷொஹெப் அக்தார், சக்லேன் முஷ்தாக், மொயின் கான்... நியூஸிலாந்திலிருந்து டேனியல் வட்டோரி ஆகியோரும் இடம்பெறவுள்ளனர்.




## ஷேவோக் ஓவர்



இந்திய கிரிக்கெட் அணியின் வீரேந்திர ஷேவோக் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக கடந்த வாரம் அறிவித்திருந்தார். ஷேவோக்கின் இந்த ஓய்வு சர்வதேச கிரிக்கெட் உலகில் பெரிதும் பேசப்படும் விடயமாக இருந்தது. டெஸ்ட், ஒருநாள், டுவென்டி டுவென்டி என அனைத்து விதமான போட்டிகளிலும் இந்திய அணியில் சிறப்பாக தனது திறமையை வெளிக்காட்டியவர்தான் ஷேவோக்.

1999 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான சர்வதேச ஒருநாள் போட்டியிலேயே ஷேவோக் அறிமுகமாகினார். தொடர்ந்து 2001 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டியிலும் கலந்துகொண்டார்.

இதன்படி 251 ஒருநாள் போட்டிகளிலில் கலந்துகொண்டு 15 சதங்கள், 38 அரைச் சதங்களுடன் மொத்தமாக 8,273 ஓட்டங்களை இவர் பெற்றுள்ளார். இதனைப் போன்றே 104 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 23 சதங்கள், 32 அரைச் சதங்களுடன் மொத்தமாக 8,586 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

# போட்டியை இழக்கின்றார் குரே என்டர்சன்



மிச்செல் சென்டர்

குரே என்டர்சன்

அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நொவெம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்த போட்டியில் நியூஸிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான குரே என்டர்சன் உடல் உபாதை காரணமாக கலந்துகொள்ள மாட்டார் என்று கூறப்படுகின்றது. என்டர்சனுக்கு பதிலாக இடதுகை சுழல் பந்து வீச்சாளரான மிச்செல் சென்டர் என்ற வீரர் இடம்பெறுகின்றார். கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற இங்கிலாந்துடனான போட்டியின்போதே என்டர்சன் உடல் உபாதைக்கு உள்ளாகியிருந்தார். இதன் காரணமாக, தென்னாபிரிக்காவுடனான போட்டிகளையும் இவர் இழக்க வேண்டியிருந்தது.

இதேவேளை, என்டர்சனுக்கு பதிலாக இடம்பெற்றுள்ள சென்டர் ஒரு பந்து வீச்சாளராக உள்ளபோதிலும், ஆக்ரோஷமாக துடுப்பெடுத்தாடவும் கூடியவர் என்பதால் என்டர்சனின் இழப்பை அவர் ஈடுகட்டுவார் என்றே கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# ஆப்கான் அணிக்கு அரிய வாய்ப்பு

அண்மையில் முடிவுற்ற சிம்பாப்வே-அயர்லாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரை வெற்றிகொண்ட சிம்பாப்வே அணி அடுத்ததாக ஆப்கானிஸ்தான் அணியுடனான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் கலந்துகொண்டு வருகின்றது. டெஸ்ட் அந்தஸ்துள்ள ஒரு அணியுடன் ஒருநாள் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் அணியொன்று கலந்துகொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி வித்யார்த்த 'ஏரோ' முகாம் நடைபெற்ற தினம்...




சாரணர்களுக்கும் சாரணியர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட விமான மாதிரி வடிவமைப்பு தொடர்பான செயலமர்வின் இறுதித் தின நிகழ்வு கண்டி வித்யார்த்த வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. கண்டி வித்யார்த்த வித்தியாலயத்தின் சாரணர் உலகக் கழகத்திற்கு ஐம்பதாண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு நடைபெற்ற மேற்படி வித்யார்த்த ஏரோ முகாமில் சாரணர்கள் கலந்துகொண்ட காட்சியினையே இங்கு காண்கிறீர்கள்.










வித்யார்த்த ஏரோ விமான சாரணர் மாதிரி வடிவமைப்பு நிகழ்வினை ஏற்பாடு செய்த முன்னாள் சாரண உறுப்பினர்கள்



விமானப் பயணச்சீட்டுகளை வென்றெடுத்த கண்டி சந்திரானந்த வித்தியாலய சாரணர்கள்

# மரக்குற்றிகளை இணைப்போம்



## விஜய் சாரணர் உலகம்

## முகாமுக்குத் தேவையான மர வடிவங்களை அறிந்துகொள்வோம்!


*சாரணர் முகாமில் நிர்மாணிக்கப்படும் உபகரண தயாரிப்பிற்காக இந்த தொழிநுட்ப முறையினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த பிணைச்சல்மூலம் மரக்குற்றிகள் ஒன்றுக்கொன்று பலமுடன் பொருந்திக்கொள்ளச் செய்ய முடியும். நன்கு பிணைக்கப்பட்ட இடத்தில் முடிச்சினை இட்டவுடன் நீங்கள் எதிர்பார்க்கும் வலுவான பிணைப்பைப் பெற முடியும். இங்கு அதற்கான சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.*




A

குற்றிகள் ஒன்றுக்கொன்று கீழ்வருமாறு பிணைக்கப்படல் வேண்டும். இங்கு உள்ள A எழுத்து படத்தில் உள்ள வடிவமானது, சாதாரண மத்திம தர மரக்குற்றிகளைப் பிணைப்பதற்குப் பொருத்தமானது. பலம் குறைந்த மரக்குற்றிகளுக்கு இந்த வடிவம் பொருந்தும்.


B மற்றும் C எழுத்துக்கள் பலமான குறுக்கு வளைவுகளைக் கொண்ட மரக்குற்றிகளைப் பிணைப்பதற்கு பொருத்தமானது. இரண்டு மரக்குற்றிகளை இணைப்பதற்கு முதலில் ஒரு மரக்குற்றியை ஆழமாக வெட்டிய பின்னர் மறு குற்றியின் முனையை நேர் எதிர் தோற்றத்தில் வெட்டல் வேண்டும். இதனால் இரண்டு மரக்குற்றிகள் நன்கு பிணைக்கக்கூடியதாக இருக்கும்.





B



C









மரக்குற்றிகளை ஒன்றன்மீது ஒன்றை அடுக்கிப் பலமான பிணைப்பை, இணைப்பை ஏற்படுத்த முடியும்.

### பாதுகாப்பு அரணுக்குப் பொருந்தும் மர வடிவம்

மரக்குற்றிகள் குறுக்காகவும் நேராகவும் உள்ள பாதுகாப்பு அரண்களுக்கு இந்த மர வடிவ பிணைப்புப் பொருந்தும். குறிப்பாக, நான்கு முனை அணை தேவைப்படும் இடங்களுக்கு இவ்வாறு வடிவத்தினை வெட்டிப் பிணைக்க முடியும்.


புள்ளடி அணையினை இட்டு மரக்குற்றியினை இணைக்கும்போது, கீழ்வரும் முறையினைப் பயன்படுத்தலாம். ஒருபோதும் ஆழம் அதிகமாக வெட்டக்கூடாது. அவ்வாறு செய்வதனால் கருவியின் பலம் குறையும்.





யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரி இன்னும் 18 வாரங்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள சொற்களை சைக்கிள் சக்கரங்களினுள் இருக்கும் எழுத்துக்கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக.




## இடைவெளிகளை நிரப்புக




## குறுக்கெழுத்துப் போட்டி இல. 160

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ |
| | ■ | | ■ | ■ | 3 |
| 4 | | | ■ | 5 | |
| | ■ | ■ | 6 | | |
| ■ | 7 | ■ | | 8 | ■ |
| 9 | | ■ | 10 | | |


### மேலிருந்து கீழ்

01. இரவில் ஒளிவீசித் திரியும் ஒருவகை பூச்சியினம்.
02. பெரும்பாலான தாவரங்கள் இதிலிருந்தே முளைக்கும்.
03. ஞானம்.
05. தோன்றல் - எதிர்ப்பதம்.
06. இது கீச்சிடும்.
07. கடலிலிருந்து வந்து கரை தொட்டுச் செல்லும்.

### இடமிருந்து வலம்

01. இந்த மின் சாதனத்தை இயக்கினால் காற்று வீசும்.
04. மென்மை.
05. (பெண்) ஆடு.
06. நிறைவு - எதிர்ப்பதம்.
08. மரம். (மாறியுள்ளது)
09. தாவரத்தின் ஒரு பாகம்.
10. வில்லன் - எதிர்ப்பாற் சொல்.

## பொருத்தமான நிழற்படத்துடன் இணைக்க








## வித்தியாசமான உருவில் X அடையாளமிடுக



## அறிவுக்கு விருந்து (14.10.2015) விடைகள்









### குறுக்கெழுத்துப் போட்டி இல.159 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 யா | ழ் | ப் | 2 பா | ண | ம் |
| ல | ■ | ■ | த | ■ | ■ |
| ■ | ■ | 3 கொ | த் | த | ன் |
| 4 எ | ள் | ■ | யா | ■ | த |
| லி | ■ | ■ | தி | 5 ந | ந் |
| ■ | 6 க | ற் | றை | ட | 7 க |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கொஸ்லாந்தை கல்வலயை சேர்ந்த அந்தோனி - ஞானசவுந்தரி தம்பதியரின் செல்வப் புதல்வி ஸ்டெலா, தனது நான்காவது பிறந்ததினத்தை 29.10.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஏ.ஷாலினி)



அவிஸாவெல்லை தல்துவ தோட்டத்தைச் சேர்ந்த மோகன்-சிரோன்மணி தம்பதியரின் செல்வப் புதல்வன் மதுர கிறிஷான், தனது பிறந்தநாளை 15.10.2015 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



மேரிவிலை நாவலப்பிட்டியைச் சேர்ந்த லதுர்ஷினி, தனது முதலாவது பிறந்ததினத்தை கொண்டாடுகிறார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.










BCAS Campus இன் கல்முனை வளாகத்தின் முதலாவது சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் சாய்ந்தமருது 'Lee meridian' மண்டபத்தின் வளாகத்தின் முகாமையாளர் உவைஸ் மொஹிதீன் பாவா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக BCAS Campus இன் தவிசாளர் பொறியியலாளர் அப்துல் றகுமான் அவர்களும், கௌரவ அதிதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தருமாகிய பேராசிரியை திருமதி ஷாணிகா ஹிரும்புரிகம அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். (ஜுனைட் எம்.பஹ்த்)



மொஹமட் நஸ்ருல்லா,
அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.



இ.கோபிகிருஷ்ணான்,
அன்பு வழிபுரம், திருகோணமலை.






அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு**



என்.ஹம்ரா பேகம்,
புஹாரி நகர் மு.வித்.,
முள்ளிப்பொத்தானை.

ந.வினோச்சன்,
யா/பு.கெ.கல்., இளவாலை.



எம்.லக்ஷான்,
நு/கொ.த.ம.வித்., கொட்டகலை.



சி.சிசாந்தன்,
பட்டிருப்பு ம.ம.வித்., எருவில்.



ஜி.தர்சன்,
மெதுகும்பட் கல்., சுத்தப்பளை.

### பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

# தூக்கத்தைப் புறந்தள்ளல்...

அதிகரித்து வரும் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள் மனித தூக்க நேரத்தை அதிக அளவில் திருடிவிடுவதாக கூறப்படுகின்றது. அந்தவகையில், இணைய மற்றும் தொலைக்காட்சி, கைபேசி வசதி உள்ளவர்கள் தமது பெறுமதியான தூக்க நேரத்தின் பெரும் பகுதியை இத்தகைய தொடர்பு சாதனங்கள்மூலம் இழந்து விடுவதாகவும் மாணவர்கள் தேர்வு மற்றும் தொழில் தேர்வுகளில் ஏற்படும் போட்டிகளை எதிர்கொள்ள தூக்கத்தைப் புறந்தள்ளி நீண்ட நேர முயற்சிகளில் ஈடுபட முனைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தகைய நிலையானது, மன அழுத்தம், சிந்தனைக் குழப்பம், கோபம், மறதி, நரம்புத் தளர்ச்சி, ஓய்வு இன்மை, நிம்மதி அற்ற நிலை, நிதானம் இன்மை போன்ற செயற்பாடுகளை அதிகரித்து வாழ்க்கையில் ஒருவித விரக்தியை ஏற்படுத்தி விடுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆகையால், கால அட்டவணைப்படி அன்றாட கடமைகளை செய்வதே இதிலிருந்து விடுபட ஒரே வழி என்றும் அவர்கள் கூறுகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை நாமே காத்துக்கொள்வோம்...



## நாம் நமக்கே உரித்தானவர்கள்

நண்பர்களே, நன்றாக நினைவில் வைத்துக்கொள் ளுங்கள். உங்கள் உடலின் உரிமை உங்களுக்கு மாத்திரமே.

உங்கள் உடலை தொட எவருக்கும் உரிமை இல்லை. அப்படிச் செய்தால் வேண்டாம் எனக் கூறி அதனை எதிர்க்கவும்.

எனினும், எமக்கு சுகயீனம் ஏற்பட்டால் வைத்தியரோ, தாதியரோ, தாய் தந்தையரோ எமது உடலை தொட வேண்டி வரலாம். அப்போது அவர்களுக்கு உடலைத் தொட இடம் கொடுக்க வேண்டி வரும்.

சகல விதத்திலும் தீயவர்களிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் உரிமை எமக்கு உண்டு.

அவ்வாறே, ஏதேனும் நடந்தால் அதனை வெளிப்படுத்தும் துணிவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அதற்கு உதவப் பலர் ஆயத்தமாக உள்ளனர். அத்தோடு, நீங்கள் அவ்வாறு செய்தால் அது சமூகத்தை நல்வழிப்படுத்த ஒரு காரணமாகவும் அமையும்.

சிலவேளைகளில் நாம் பெரிதும் நம்பும் ஒருவர் மூலமும் பிரச்சினைகள் ஏற்படலாம். மிகவும் விழிப்பாக இருங்கள்.

நண்பர்களே, எம்மைச் சூழ உள்ள பலர் சிறியோராகிய எமது பாதுகாப்புக்கு பக்கபலமாக உள்ளனர் என்பதை மறக்க வேண்டாம். முக்கியமாக செய்ய வேண்டியது சம்பவத்தை மறைக்காமல் வெளியே சொல்வதேயாகும்.

- எவரது அச்சுறுத்தலுக்கும் பயப்படாதீர்கள். யாரிடமாவது உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள்
- தீய தொடுகையினால் நீங்கள் சிரமங்களை எதிர்கொண்டால் அதனை இரகசியமாக வைத்திருக்க வேண்டாம்.
- யாரேனும் ஒருவர் உங்களை வலிந்து ஏதேனும் ஒரு இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்ல முயன்றால் சத்தம் இடுங்கள்... அங்கிருந்து உடனே ஓடிவிடுங்கள்.
- இதுகுறித்து எந்தவொரு தொலைபேசி மூலமாகவும் 1929 எனும் இலக்கத்திற்கு அழைத்து விடயத்தைக் கூறிவிடுங்கள்.

## எம்மால் செய்யக்கூடியவை எவை?

- எமக்குப் பாதுகாப்பு இல்லை என நாம் உணரும் இடங்களிலோ அல்லது எமக்கு தொந்தரவுகள் செய்யலாம் என நாம் நினைப்பவர்களுக்கு அருகிலோ தனியாக இருக்க வேண்டாம்.
- அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது தொந்தரவுகள் விளைவிக்கும் வகையிலோ எவராவது எம்மைத் தொட முயர்சித்தால் வேண்டாம் எனக் கூறுங்கள். உங்கள் வெறுப்பை வெளிப்படுத்துங்கள்.

நண்பர்களே, எவராவது ஒருவர் எம்மை தீய முறையில் தொட்டால் அதுகுறித்து உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரிடம் விரைவாகக் கூறுங்கள்.

## எமக்கும் உரிமைகள் உள்ளன...

சிறந்த கல்வியைப் பெறும் உரிமை நம் அனைவருக்கும் உண்டு.

எமது பாரம்பரிய பண்பாட்டு பழக்க வழக்கங்களை கடைப் பிடிக்கவும். அதற்கு மதிப்ப ளிக்கவும் முடியும்.

சிறந்த சுகாதார வாழ்க்கையை பேணவும், சுகாதார சேவைகளை பெறவும் எம்மால் முடியும்.

எமது கல்விக்கும் சுகாதாரத் திற்கும் பாதிப்பை ஏற்படுத்த எவராலும் முடியாது.

அதேபோல் விநோதமாய் பொழுதைக் கழிக்கவும் அழகியல் செயற்பாட்டில் ஈடுபடும் உரிமையையும் எவராலும் பறிக்க முடியாது.

எமது குடும்பத்தவருடன் எந்தவொரு நாட்டுக்கும் சென்று திரும்பிவர எமக்கு உரிமையுண்டு.

பிறந்ததில் இருந்து எமது பெற்றோர் யார்? என்பதை அறிந்துகொள்ளவும் அவர்களின் அன்பைப் பெறவும் எமக்கு உரிமை உண்டு.

எமது கருத்துக்களை தெரிவிக்கவும், தகவல்களை சேகரிக்கவும் எமக்கு உரிமை உண்டு.

எமது பெற்றோரிடம் இருந்து எவராலும் எம்மைப் பிரிக்க முடியாது.

## எமக்கும் பல பொறுப்புக்கள் உள்ளன.

- நன்கு கல்விகற்பதும் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவதும் எமது பொறுப்பாகும்.
- நாம் புத்தியோடு எமது நண்பர்களை தெரிவுசெய்ய வேண்டும்.
- நண்பர்களுடன் நட்புப் பாராட்டுவதும் அவ்வாறே.
- ஏனையோரின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கைகளுக்கு கௌரவம் அளிக்க வேண்டும்.
- எமக்குத் தொல்லை கொடுப்பவர்களிடம் இருந்து தூர விலகுவதும் எமது பாரிய கடமையே.
- வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவுங்கள்.
- எமது பேச்சால் ஏனையோருக்கு சிரமங்கள் ஏற்பட்டால் அது தவறு.
- நல்ல சுகாதார பழக்க வழக்கங்கள் எம்மைப் பாதுகாக்கும்.
- நண்பர்களே, எமது எதிர்கால தேவைகளான கல்விக்கும் ஏனைய வேலைகளுக்கும் நேரத்தை சமமாக ஒதுக்குங்கள்.

-அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ குணம் கொண்ட வெற்றிலை...



'வெற்றிலை' தொன்று தொட்டு நாம் உபயோகித்து வரும் ஒரு மருத்துவ மூலிகை யாகும். வெற்றிலை அதிக அளவில் நீர்ச்சத்து நிறைந்தது. 6 மேலும், புரதம், தாது உப்பு, நார்ச்சத்து மற்றும் பல அத்தியா வசிய ரசாயனப்பொருட்களும் இதில் அடங்கியுள்ளன. பக்றீரியா, வைரஸ் மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் நோய்த் தொற்றுகளை தடுக்கும் வல்லமையை வெற்றிலை கொண்டுள் ளது. டைபாய்ட், கொலரா, காசநோய் கிருமிகளை கொல்லும் ஆற்றல்கூட வெற் றிலைக்கு உள்ளது என்பதும் இதன் சிறப் பம்சமாகும்.

எனினும், இதன் பாவனை அளவிற்கு மிஞ்சும்போது அதுவே வாய்ப்புற்று நோயை ஏற்படுத் துவதாகவும் அமைந்து விடுகின்றது.

வெற்றிலை களில் 80 முதல் 85 சதவீதம் நீர்ச்சத்து காணப்படுகின்றது.

# ரஷ்யாவில் கடலுக்கடியில் ஆலயம்



ரஷ்யாவில் கடலுக்கு அடியில் ஆலயம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஒரு தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். 'கேப்ஃபியோலண்ட்' என்ற இடத்தில் 20 மீற்றர் ஆழத்தில் இவர்கள் மிகப் பெரிய சிலுவை ஒன்றை நிறுவியுள்ளனர். அதற்கு 'செயின்ட் நிகோலஸ் தேவாலயம்' என்று பெயரும் வைத்துள்ளனர். ரஷ்ய மோட்டார் சைக்கிள் சங்கமொன்றும் மொஸ்கோவைச் சேர்ந்த ஒரு தேவாலயமும் இந்தத் திட்டத்துக்கான செலவிற்குரிய அனுசரணையை வழங்கியுள்ளன.

நிலத்தில் இருக்கும் தேவாலயத்தை ஒத்த வடிவிலேயே கடலுக்குள்ளும் இந்த தேவாலயத்தை உருவாக்கும் முயற்சியில் இவர்கள் இறங்கியுள்ளனர். எதிர்காலத்தில் இந்த தேவாலயத்தை சுற்றுலாப் பயணிகள் வந்து பார்க்கும் விதத்தில் அமைக்க உள்ளனர். அது மட்டுமன்றி, 'க்ரிமியன்' வரலாற்றை எடுத்துக் கூறும் விதத்தில் ஓர் அருங்காட்சியகமும் இங்கே அமைக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


விஜய்

# ஈரநிலம் ஓவியம் - 2016

## நாடளாவிய ஓவியப் போட்டி

2016 பெப்ரவரி 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஈரநில தினத்தையொட்டி மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து 'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையின் கீழ் நடத்துகின்ற சித்திரப் போட்டியில் பங்குபற்ற உங்களுக்கும் ஒரு வாய்ப்பு

இப்போட்டி தரம் 1, தொடக்கம் தரம் 13 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மற்றும் பகிரங்கப் போட்டியாகவும் 12 பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளது. பகிரங்க போட்டியில் பங்குபற்றுவோருக்கு வயதெல்லை கிடையாது. பரிசு விபரங்கள் வருமாறு:

**பாடசாலை பிரிவு**

முதலாம் இடம் - ரூபா 20,000
இரண்டாம் இடம் - ரூபா 15,000
மூன்றாம் இடம் - ரூபா 10,000

**பகிரங்கப் பிரிவு**

முதலாம் இடம் - ரூபா 25,000
இரண்டாம் இடம் - ரூபா 20,000
மூன்றாம் இடம் - ரூபா 15,000

முதலாவது இடத்தை வெற்றியீட்டுகின்றவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன் தேசிய வனவிலங்குகள் பூங்காவில் உள்ள பங்களாவில் இரண்டு நாட்களை கழிப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

இறுதிப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பணப்பரிசும் மற்றும் சான்றிதழ்கள் உட்பட பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

**சித்திரங்களுக்கான தலைப்புகள்**

**தரம் 1, 2**
* நான் கண்ட ஈரநிலம்
* ஈரநிலத்தின் அழகு
* ஈரநில சூழலில் வாழ்கின்ற விலங்குகள் மற்றும் பறவைகள்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

**தரம் 3, 4, 5**
* ஈரநிலத்தின் அழகு
* கடல் சார்ந்த கண்டல் நிலம்
* ஈரநில சூழலில் வாழ்கின்ற விலங்குகள் மற்றும் பறவைகள்
* நன்னீர் சேற்று நிலம்
* முருகைக் கற்கள் கொண்ட கடல்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

**தரம் 6, 7, 8**
* கண்டல் தாவரங்களை பாதுகாப்போம்
* சேற்று நிலங்களை பாதுகாப்போம்
* காடொன்றில் நீர் கொண்ட குளம்
* களப்பொன்றின் அழகு
* ஈரநிலத்தை பாதுகாப்போம்
* ஈரநிலம் பயன்மிக்கவை

**தரம் 9, 10, 11**
* நன்னீர் கொண்ட ஈரநிலம்
* ஆற்று வாயின் அழகு
* நான் கண்ட சேற்று நிலம்
* ஈரநிலத்தை பாதுகாப்போம்
* ஈரநிலம் இன்றியமையாதவை, பயன்மிக்கவை
* உவர்நீர் கொண்ட ஈரநிலம்

**தரம் 12, 13**
* ஈரநிலத்தை காப்பது சுற்றாடலை காப்பதாகும்
* சேற்று நிலத்தில் மண்நிரப்புவதால் சுற்றாடல் அழிந்து போகும்
* கண்டல் தாவரங்கள் கொண்ட சூழல் கடலரிப்பை தடுக்கும்
* தேசிய வனவிலங்குகள் பூங்காவில்/சரணாலயத்தில் உள்ள ஈரநிலம்
* ஈரநிலம் முக்கியத்துவம் மிக்கது, பயன்மிக்கது
* ஈரநிலத்தை பாதுகாப்போம்

**பகிரங்கப் பிரிவு**
* ஈரநிலம் வளம்மிக்கதாகும்
* ஈரநிலம் பயனற்ற நிலம் அல்ல
* ஈரநிலம் முக்கியத்துவம் மிக்கது, பயன்மிக்கது

**போட்டி நிபந்தனைகள்**

இங்கு வழங்கப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும். வரையப்படும் சித்திரம் 18x14 அங்குலம் அளவில் இருத்தல் வேண்டும். பெஸ்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கைகளில் படிந்துவிடாத எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
* முதல் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவுசெய்யப்படுகின்ற வெற்றியாளர்கள் நடுவர் குழுவொன்றின் முன்னிலையில் ஈரநில நேரடிக் காட்சியொன்றை சித்திரமாக வரைவதற்கு பணிக்கப்படுவர்.
* சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம், மாகாணம், கையொப்பம் ஆகிய விபரங்களுடன் பாடசாலை அதிபர் அல்லது இத்துறைசார் ஆசிரியர்கள் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோரில் ஒருவரது உறுதிப்படுத்தலுடன் கீழ்காணும் முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரிலும் ஒப்படைக்கலாம்.
( உங்கள் விபரங்களை தெளிவாக எழுதவும். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)
பகிரங்கப் பிரிவில் போட்டியிடுவோர் தலைப்பு, பெயர், முகவரி, மாவட்டம், மாகாணம், தொலைபேசி இலக்கம், கையொப்பம் ஆகியவற்றுடன் தமது படைப்பை அனுப்புதல் வேண்டும்.
* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்

**போட்டி முடிவு திகதி 2015 நொவெம்பர் 13**

வெற்றியீட்டுவோருக்கு தேசிய ஈரநில தினமான 2016 பெப்ரவரி 02 ஆம் திகதியன்று நடைபெறும் வைபவத்தின்போது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் கரங்களினால் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

ஈரநில ஓவியம் - 2016
இயற்கை வள முகாமைத்துவ மற்றும் மீளாய்வுப் பிரிவு
மத்திய சுற்றாடல் அதிகார சபை,
இல 104, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**மேலதிக விபரங்களுக்கு**

கே.பிரபாகரன்.
தொலைபேசி எண்: 0710164820 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்

HNB
Lanka Jalani
SMALL FISHERS FEDERATION SUDEESA SRI LANKA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உலகின் கொடிய விஷத் தாவரங்கள்

இயற்கை மிகவும் விசித்திரமானது. சிலவேளைகளில் அதன் அழகு நம்மை வியக்க வைக்கின்றது. சிலவேளைகளில் அதன் கொடூரங்கள் எம்மை அச்சுறுத்துகின்றன. இங்கு இயற்கையினால் உருவாக்கப்பட்ட கொடூரமான விஷத் தாவரங்கள் பற்றியே குறிப்பிடப்படுகின்றது. அதிர்ஷ்டவசமாக இத்தாவரங்கள் எமது நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.





## இரத்தம் கசியும் பூஞ்சணம்

ஆங்கிலப் பெயர்: Bleeding tooth fungus
விஞ்ஞானப் பெயர்: *Hydnellum Peckii*

இத்தாவரத்தின் காய்களில் இருந்து விஷமுள்ள செந்நிறத் திரவம் சுரக்கின்றது.



## செந்நிற அலை

ஆங்கிலப் பெயர்: Red tide
விஞ்ஞானப் பெயர்: *Heracleum mantegazzianum*


இது நீரில் கரையும் ஓர் அபூர்வமான தாவரமாகும். இதன்போது நீர் செந்நிறமாகும். அந்த நீரில் இருக்கும் உயிரினங்கள் இறந்துவிடும். அத்துடன், அந்த உயிரிகளை உட்கொள்ளும் மீன்களும் இறந்துவிடுகின்றன.



## குஸ்குட்டா

ஆங்கிலப் பெயர்: Cuscuta
விஞ்ஞானப் பெயர்: *Dodder vine*

இது நச்சுத்தன்மையுள்ள கொடி வகையாகும். சிவப்பு, மஞ்சள், இளம் செந்நிறம் கொண்ட கொடிகள் உள்ளன. அருகில் உள்ள தாவரத்தில் படர்ந்து தனது இருப்பினை பாதுகாத்துக்கொள்கின்றது. பேயின் தலைமுடி, பேயின் மோதிரம், மாயக்காரியின் கொண்டை ஆகிய பெயர்களில் இது அழைக்கப்படுகின்றது.



## மூளைக் கள்ளி

ஆங்கிலப் பெயர்: Brain Cactus
விஞ்ஞானப் பெயர்: *Mammillaria elongata cristata*


மூளையின் வடிவத்தினைக் கொண்ட இந்த தாவரம் கள்ளித் தாவரத்தினை சேர்ந்தது. மெக்சிக்கோவில் பரவலாகக் காணப்படுகின்றது. பலதரப்பட்ட வடிவங்களில் இத் தாவரங்கள் உருவாகின்றன.



## ஏன்ஜல்ஸ் டிரம்பட்

ஆங்கிலப் பெயர்: Angel's trumpet
விஞ்ஞானப் பெயர்: *Brugmansia*

நச்சுத் தாவரமாயினும் மருத்துவ குணம் மிக்க தாவரமாகும். தாவரத்தின் அனைத்து பகுதிகளும் விஷமுடையது. தொட்டால் பக்கவாதம், வயிற்றோட்டம் ஏற்படும். மூர்ச்சையாதல், மயக்கம் இறுதியில் மரணம் ஏற்படக்கூடும்.



## கிம்பி, ஜயன்ட் ஸ்டின்கிங் ட்ரீ

ஆங்கிலப் பெயர்: Gimpi, giant stinging tree
விஞ்ஞானப் பெயர்: *Dendrocnide excelsa*

இதில் முள் போன்ற நார்கள் உள்ளன. முள் உடலில் குத்தினால் விஷம் ஏறும். ஆதலால் குத்தியவுடன் அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும்.



## வீனஸ் ப்ளைட்ரப்

ஆங்கிலப் பெயர்: Venus flytrap
விஞ்ஞானப் பெயர்: *Dionaea muscipula*

வீனசின் இலையான் பொறி என அழைக்கப்படும் இத்தாவரத்தில் விஷம் அதிகம் உள்ளது. மலரின் வடிவமும் விசித்திரமானது. மலரில் அமரும் பூச்சிகளைப் பிடிப்பதற்கு வாய் போன்ற ஒரு அமைப்பு உள்ளது. இதன் காரணமாக தாவர உலகின் கொள்ளைக்காரன் என்றும் இதனை செல்லமாக அழைப்பர்



## டெத் கமஸ்

ஆங்கிலப் பெயர்: Death Camas
விஞ்ஞானப் பெயர்: *Toxicoscordion venenosum*

இந்த தாவரத்தின் எந்தப் பகுதியினை உட்கொண்டாலும் வயிற்றோட்டம், குமட்டல், உயர் இரத்த அழுத்தம், மயக்கம் அல்லது மரணம் சம்பவிக்கக்கூடும்.



## காரியன் பூ



ஆங்கிலப் பெயர்: Carrion Flower
விஞ்ஞானப் பெயர்: *Amarphophallus titanium*

உலகின் மிகப் பெரிய பூவாகக் கருதப்படுகின்றது. 10 அடி உயரம் வரை வளரக்கூடியது. சடலத்தில் இருந்து வீசும் துர்நாற்றத்தினைப் போன்று துர்மணம் வீசும். அதிக நச்சுத் தன்மை வாய்ந்தது.

## பொம்மைக் கண்கள்



ஆங்கிலப் பெயர்: Doll's eyes
விஞ்ஞானப் பெயர்: *Actaea pachypoa*

இதனை வட மற்றும் கிழக்கு அமெரிக்கப் பகுதிகளில் காண முடியும். இதன் காய்கள் உருளை வடிவமானவை. இந்த காயில்தான் நச்சுத்தன்மை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்











# பற்தூரிகை



பண்டைய கால பற்தூரிகைகள்

பற்களை சுத்தப்படுத்துவதற்காக அறிமுகமான ஓர் சாதனம்தான் பற்தூரிகை ஆகும். ஆரம்பகாலத்தில் எகிப்து, பெபிலோனியா மற்றும் சீனாவிலேயே பற்தூரிகை பயன்பாடு இருந்துள்ளது. அது கி.மு. 3000 மற்றும் கி.மு. 1600ஆண்டுக் காலப்பகுதிகளில் ஆகும். ஆனால், அன்றைய காலத்தில் இன்று இருப்பது போன்ற தோற்றத்தில் பற்தூரிகைகள் இருக்கவில்லை. மாறாக, தெரிவுசெய்யப்பட்ட சில மரக்குச்சிகளே பல் தேய்க்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் சில விலங்குகளின் ரோமத்தைப் பயன்படுத்தியும் பற்தூரிகைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1938 இல்தான் நைலோன் நார்களைப் பயன்படுத்தி பற்தூரிகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 1960 களில் மின்சாரத்தில் இயங்கும் பற்தூரிகைகள் பயன்பாட்டுக்கு வந்தன.

# நாம் எவ்வாறு உணவு உட்கொள்ளலாம்?



★ நாம் உணவு உட்கொள்ளும்போது வயிறு நிறையும் அளவில் உண்பது கூடாது. வயிற்றில் பாதியளவு உணவு, கால்பகுதி தண்ணீர், அடுத்த கால்பகுதி காற்று என்று இருக்கும் வகையில் எமது உணவு வேளை அமைய வேண்டும்.

★ ஒவ்வொரு உணவு வேளையையும் குறித்த நேரத்தில் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நேரங்களில் உண்ணக்கூடாது.



★ உண்ணும்போது பேசிக்கொண்டோ, சிரித்துக்கொண்டோ அல்லது ஏதாவது படித்துக்கொண்டோ இருக்கக்கூடாது.

★ அதிக உணவு சோம்பலை ஏற்படுத்தி உடலுக்கு நோயை கொடுக்கும். அவ்வாறே, உடலுக்கு சத்துள்ள உணவுகள் கிடைக்காமல் போனாலும்கூட உடலில் சோர்வு, ஊட்டச் சத்துக் குறைபாட்டு நோய்கள் ஏற்படும். எனவே, எப்போதும் நிறையுணவை அளவோடு உட்கொள்ள வேண்டும்.

★ இருட்டிலோ, நிழல் விழும் இடங்களிலோ அமர்ந்து உண்பதை தவிர்க்க வேண்டும்.

★ உணவு உட்கொள்ளும்போது இடையில் எழுந்து சென்று மீண்டும் வந்து அமர்ந்து உண்ணக்கூடாது.

★ உண்ணும்போது அடிக்கடி நீர் அருந்துவது கூடாது. அதிக கவலை, துக்கம் , கோபம் ஆகியவற்றுடன் உணவு உட்கொள்வதும் உடலுக்கு நன்றன்று.

★ உணவில் உப்பு,புளி, காரம் அதிகம் சேர்ப்பதை தவிர்ப்பது நன்று.

★ அவசரமாக உண்ணவோ, உணவை விழுங்கவோ கூடாது. உணவை நன்கு மென்று விழுங்க வேண்டும்.



# லூன் பறவை



வாத்து மற்றும் தாரா போன்ற உடற்தோற்றத்தை உடைய ஒரு பறவை இனமே 'லூன்' ஆகும். இந்த பறவைக்கு நீரில் மிதந்தவாறு நீந்திச் செல்லும் ஆற்றலும் உண்டு. வட அமெரிக்கா மற்றும் வட ஐரோப்பாவில் இவற்றை அதிகம் காணலாம். இவற்றின் அலகு கூர்மையாக இருக்கும். நீரில் நீந்திச் செல்லும் போது, நீருக்கடியில் மீன்கள் செல்வதைக் கண்டால் உடனே நீரில் மூழ்கி மீன்களைக் கொத்தி உண்ணும். மீன்களைப் பிடிப்பதற்காக நீரில் அதிகமான ஆழத்திற்கும் செல்லும். அட்டைகள், தவளைகள், நத்தைகள் போன்ற சிறிய நீர்வாழ் உயிரினங்களையும் இப்பறவைகள் இரையாக்கிக்கொள்ளும். லூன் பறவைகள் இரையை விழுங்கியதும், அது விரைவில் சமிபாடு அடைவதற்காக ஒரு கூழாங்கல்லையும் சேர்த்து விழுங்கிவிடுமாம்!.



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஒக்டோபர் 28 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 28, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org